www.tamilarangam.net

# அலை ஓசை

தமிழ் - ஆங்கில விஞ்ஞான கலாச்சார மாதாந்த சஞ்சிகை

Tamil-English Science & Cultural Monthly Magazine

அலை 4 தை மாசி 1989 ஓசை 1




லண்டனில் இருந்துவரும் தமிழ்ச் சஞ்சிகை

ALAI 4 JANUARY - FEBRUARY 1989 OSAI 1

# ALAI OSAI

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ROCKFORT PRODUCTS

A Trading Division of Vignesh Ltd.

**Try us for quality, service and prices**

## The DISCiPLE

*Manufacturer and distributor*

THE ULTIMATE
ALL-IN-ONE
DISC, PRINTER, JOYSTICK, NETWORKING
INTERFACE FOR THE 48K, 128K, +2 SPECTRUM

- The Disc interface that allows up to 1.6Mb of storage on 2 standard disc drives single or double density, single/double sided, 40/80 track, 3.5" or 5.25".
- The Snapshot Button that saves any cassette software to disc in seconds, at any point you wish.
- The Printer Interface that prints out any screen. Compatible with most Epson parallel printers - uses normal Sinclair commands LLIST, LPRINT, COPY.
- The dual joystick ports that accepts Sinclair and Kempston compatible joysticks.
- The networking that allows the DISCiPLE to act as file servers; shared access to printers and Disc Drives for up to 64 Spectrums.
- The through port that allows connection of other standard Spectrum interfaces.

THE ALL PURPOSE INTERFACE
TO TAKE YOUR SPECTRUM
TO THE LIMIT
AVAILABLE NOW
ONLY £69.95
incl P+P

## DISC DRIVES-PRINTERS & DISCiPLE DRIVE PACKAGES

High quality Drives integrated with a Built-in Power supply and connection cable - 3.5", 5.25", single or dual, for the Spectrum, BBC, QL, IBM .. .. .. ..

**DRIVES**

| | |
|---|---|
| 3.5" SINGLE DRIVE | £84.00 |
| 3.5" DUAL DRIVE | £154.00 |
| 5.25" SINGLE DRIVE | £128.00 |

**DISCIPLE & DRIVE PACKAGES**

| | |
|---|---|
| DISCIPLE + 3.5" SINGLE DRIVE | £130.00 |
| DISCIPLE + 3.5" DUAL DRIVE | £195.00 |
| DISCIPLE + 5.25" SINGLE DRIVE | £171.60 |

**DISCIPLE + DRIVE + PRINTER**
(Centronics GLP II)

| | |
|---|---|
| DISCIPLE + 3.5" SINGLE DRIVE + PRINTER | £286.00 |
| DISCIPLE + 5.25" SINGLE DRIVE + PRINTER | £327.60 |

**PRINTERS**

| | |
|---|---|
| PANASONIC KX-P1081 | £156.00 |
| CENTRONICS GLP II (with tractor feed) | £157.30 |
| STAR LC-10 MONO | £182.00 |
| STAR LC-10 COLOUR | £210.60 |
| SEIKOSHA SP - 180-A1/VC | £133.65 |
| CITIZEN - 180-E | £190.13 |
| AMSTRAD - DMP3250 | £199.00 |

**CENTRONICS GLP 11**

100 cps Draft printing.
25 cps in NLQ mode.
2K input buffer.
IBM and FX modes.
PIN addressable graphics.
serial & parallel interfaces.

## BRANDED DISCS — ROCKFORT DISC STORAGE

### BRANDED DISCS

| | |
|---|---|
| 3M 5.25" DS/DD | £6.90 |
| JVC 5.25" DS/DD | £6.60 |
| SONY 5.25" DS/DD | £6.25 |
| BASF 5.25" DS/DD | £6.60 |
| MAXELL 5.25" DS/DD | £6.90 |
| 3M 3.5" DS/DD | £11.95 |
| JVC 3.5" DS/DD | £11.95 |
| SONY 3.5" DS/DD | £11.95 |
| DYSAN 3.5" DS/DD | £11.95 |
| SONY 5.25" HD | £11.75 |
| DYSAN 5.25" HD | £11.75 |
| MAXELL 5.25 HD | £14.95 |

### ROCKFORT BRANDED

| | |
|---|---|
| 5.25" DS/DD | £5.00 |
| 3.5" BULK DS/DD | £9.00 |

Rockfort Discfile Range of products not only offer an easy reference and attractive disc filing system but also offer complete protection from damaging dust particles.

| | |
|---|---|
| MF 10 FLOPPY DISC BOX (holds 10 5.25" discs) | £1.75 |
| MF 50 FLOPPY DISC BOX (holds 50 5.25" discs) | £7.95 |
| MD 10/20 MICRO DISC BOX (holds 10 3.0" discs or 20 3.5" discs) | £4.75 |

## ACCESSORIES

EVERYTHING YOU NEED
AT UNBEATABLE PRICES

| | |
|---|---|
| Disc Drive Data Cable | £8.75 |
| DISCIPLE Printer Cable | £8.70 |
| Quick Shot II Joystick | £6.10 |
| Listing Paper 1000 Sheets (60 GRAMS MICRO PERF 11" * 9.5") | £6.95 |

| PRINTER RIBBONS | 2 off | 5 off |
|---|---|---|
| CENTRONICS GLP II | £3.50 | £2.60 |
| PANASONIC KX-P1081 | £5.65 | £4.35 |
| EPSON LX80 | £3.05 | £2.20 |
| SEIKOSHA GP80 | £3.50 | £2.60 |
| SEIKOSHA GP100 | £3.50 | £2.60 |

* ALL PRICES EXCLUDE VAT.
* GOODS SUBJECT TO AVAILABILITY.
* 1 YEAR FULL GUARANTEE ON ALL OUR PRODUCTS.
* POSTAGE :- ORDERS UP TO £50.. .. ... £2.00
DISC DRIVES, PRINTERS .. £8.00
NEXT DAY DELIVERY. .. .. £12.00

01 - 203 0191

ROCKFORT PRODUCTS
81 CHURCH ROAD
LONDON NW4 4DP

Telex: 933740 GANESH G. Fax: 01-203 3319
OVERSEAS ORDERS AND TRADE ENQUIRIES WELCOME

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அலை ஓசை
# ALAI OSAI

தமிழ்-ஆங்கில விஞ்ஞான கலாச்சார மாதாந்த சஞ்சிகை

Tamil-English Science & Cultural Monthly Magazine

அலை 4 ஓசை 1 தை மாசி 1989 இதழ்



EDITORS:
*Bala Ravindran*
*K.Jeyakumar*

ASST. EDITORS:

TAMIL
*A. F. Mariadas*
*G.Meganathan*

ENGLISH
*Dr.S. Maheswaran*

SCIENCE & TECHNOLOGY
*P.Nanthacumar*

REPORTER
*S.N. Raguram*


வாழ்த்துகின்றோம்

அண்மையில் நடந்து முடிந்த தமிழகத்துத் தேர்தல் முடிவுகள் ஜனநாயகத்திற்குக் கிடைத்த பெரும் வெற்றியாகக் கருதுகின்றோம். அண்மைக் காலங்களில் சாக்கடையாக மாறியிருந்த தமிழக அரசியல், சிறந்த அரசியல் அனுபவஸ்தரும் களம் பல கண்ட கலைஞர் கருணாநிதியினதும் அவரது கழகத்தினதும் அயராத முயற்சியின் விளைவாக மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கரங்களில் தமிழக மக்களால் ஒப்படைக்கப்பட்டமை தமிழக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்து ஜனநாயகத்தை மேம்படுத்துமென்று எண்ணுகின்றோம்.

கலைஞர் அவர்கள் ஈழத்தமிழர்பால் கொண்டுள்ள அன்பு சொல்லிடங்காது. தனது வெற்றியிலும் தோல்வியிலும் ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுக்க அவர் என்றுமே பின்நின்றதில்லை. இலங்கை, இந்திய இராணுவங்கள் ஈழத்தில் கொடுமை புரியும் போதெல்லாம் தமிழகத்தில் பல்வேறு போராட்டங்கள் நடாத்தித் தமிழர் நெஞ்சங்களுக்கு ஆறுதலளித்தமை மறக்க முடியாதது.

கலைஞர் கருணாநிதியின் வெற்றிக்கு வாழ்த்துக்கள் பலகூறி அவரது ஆட்சி சிறப்புடன் அமைய தமிழகமும் தமிழீழமும் உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழ் நெஞ்சங்களும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.


All right reserved. No part of this publication may be reproduced without prior written permission of the publisher. The publisher cannot accept any responsibility for claims or error articles, programs or advertisements published. The opinions expressed on the pages of this magazine are those of the authors and do not necessarily represent those of the authors and do not necessarily represent those of the publisher WALTHAM FOREST THAMIL SANGAM.


## HOW TO SUBMIT ARTICLES:

Readers are welcome to write to **ALAI OSAI** publication.Please send your articles to: **THE EDITOR, ALAI OSAI, 109 Philip Lane, Tottenham, London N15 4JR.**

*PUBLISHERS: WALTHAM FOREST THAMIL SANGAM, 11 Violet Road, Walthamstow, London E17 8HZ. Tel: (01) 539 7747*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | புத்தாண்டு வரும் - கவிதை | 3 |
| 2 | இதயத்திலிருந்து இதயம் வரை -சிறுகதை | 6 |
| 3 | இலங்கையின் பிரதேச தேசியவாதம் - ஆய்வுக்கட்டுரை | 9 |
| 4 | மௌனம் கலைந்த மலர்கள் - கவிதை | 11 |
| 5 | அவளுக்கென்றோர் மனம் - சிறுகதை . . . . . . . . | 12 |
| 6 | TRIBETE TO SOCIAL WORKER MR.S.MAHARASINGAM | 14 |
| 7 | சவுத்தோல் கோல்ட்ஸ் பரிசளிப்பு விழா | 16 |
| 8 | மீரா எங்கே போகிறாள் - சிறுகதை | 17 |
| 9 | பைய வரும் தைமகளே - கவிதை | 18 |
| 10 | புறப்பட்டு வா மகனே ! - கடிதம் | 19 |
| 11 | மங்கையர் மஞ்சரி | 20 |
| 12 | ஈழத்துச் செய்திகள். . . . . . . . . . . . . . | 21 |
| 13 | HUMAN RIGHTS DAY APPEAL | 22 |
| 14 | NOTICE OF MOTIONS . . . . . . . . . . | 24 |
| 15 | பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை . . . . . . . | 25 |
| 16 | வாசகர்கள் எழுதுகிறார்கள் . . . . . . . . . . . . | 26 |
| 17 | சிறுவர் களஞ்சியம் | 28 |
| 18 | குறுக்கெழுத்துப் போட்டி | 30 |
| 19 | TAMIL ORPHANS TRUST . . . . . . . . . . | 32 |
| 20 | விராஜ் மென்டிஸ் பற்றிய பி.பி.சியின் கலந்துரையாடல் | 33 |
| 21 | வோல்தம்பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்தின் 4வது ஆண்டுவிழா | 36 |
| 22 | பொங்கல் கவிதைகள் | 37 |
| 23 | இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் | 38 |
| 24 | இந்துக்களுக்குரிய விசேட தினங்கள் | 40 |






www.tamilarangam.net

# புத்தாண்டு வரும்

கோலப் பாட்டெழுதி - கொஞ்சு தமிழால் கொட்டிடுவாள் கொள்ளை அன்பை
தாலாட்டுத் தேன் தமிழால் - தன்நெஞ்சு தான்உழைத்துத் தந்திடுவாள் தன்னை

நொந்து எனைத் தீருள் நோன்பிருப்பாள் நோய் கண்டால்
அந்த அன்னையவள் அருகிருப்பாள் - ஆக்கிடும் அவள் ஆசியாலே,

விடிவெள்ளி ஓடி வர - விண்ணுடுத்த இரவுப் போர்வையொன்று
முடிவென்று, முந்திய ஆண்டுக்கு முத்தாய்ப்பாய் - ஒதுங்கி விட மேகத்திரை கிழிய



பொற்கதிர் கதிர் கண்டு பொங்கலிட்டுப் பூரிக்க
பெற்றவரும் மற்றவரும் பேசி மகிழ்ந்திருக்க
முற்றிய கனியோடு முத்தமிழ் கலையோடு
முற்றத்தில் கோலம் சிரித்துக் கிடக்க,

செந்தமிழின் சிறப்பெல்லாம் சேர்ந்திருக்க
சின்னஞ் சிறிசுகள் சீனவெடி கொளுத்த,
வந்த விருந்தை வரவேற்க - வளைகொஞ்சும் கரமெல்லாம் முந்த,
சந்தனப் பொட்டுச் சரியாக இட்டு,
சரிகைப் பட்டு அதை வழுவாத கட்டு,
நந்தவனத்தில் மல்லிகை மொட்டு
நங்கையவள் பின்னலை அது தொட்டு
பூபாளத்தில் புன்னகை மொட்டு
பூவையவள் புதுக்குரலில் சிட்டு
காளையவன் கண் பட்டு - குமரியவள் குங்குமத் தட்டு
தெருவெல்லாம் கூத்தாடும் - திண்ணையெல்லாம் பண்பாடும்,

அம்மியில் குழவிக் கல் மோதும் - உலக்கைகள் ஒத்தூதும்,
அடுப்பினிலே கத்தரி பொரிந்து கத்தும் - அங்கே
நெத்தலிக் குழம்பு கூப்பிடும்,
தலைவாழை இலை விரியும் - தயிர்வாடை அதில் வீசும்,
சமையலெல்லாம் சங்கீதம் - சபையெல்லாம் சந்தோசம்
பொன்னொளி வீசும், பௌர்ணமி நிலவினிலே
பொக்கைவாய்ப் பொன்னம்மா - பெடி பெட்டை சூழ்ந்திருக்க
பக்குவமாய்ப் பழங்கதைகள் பகன்றிடுவாள்
பேத்தி பனங்கிழங்கின் நாரெடுப்பாள்
பூட்டியவள் பாக்குரலில் இடித்தெடுப்பாள்
பொக்கை வாயதைப் பொச்சடிக்கும்
பெடி பெட்டை மனம் புல்லரிக்கும்
புத்தாண்டின் ஒரு பொழுது புன்னகையாய்ப் பொலியும்
பத்தாண்டிற்கு முன்னே புத்தாண்டு இப்படித்தான் இனிக்கும்



இரவைக் கிழித்து உயிரைக் குடிக்கவரும் ஷெல்கள் இன்று
நெஞ்சினிலே நினைவின் நெருஞ்சி முட்களாய்த் தைக்கும்
தொட்டணைக்க முடியாத நெருப்பின் வடுக்கள் அவை
பொட்டழிந்த ஈழப் பெண்ணொருத்தி இதயம் காய்ந்து நிற்கின்றாள்

www.tamilarangam.net



பொங்கலுக்குப் பூவெடுக்கும் பூவையவள் பூவிழந்து ... போனாள்
கரும்புக்குக் கடன் கொடுக்கும் கனியவள் - இன்று
வேம்புக்கு விலையாகிப் போனாள்
காற்றுக்குக் கருங்கூந்தல் ஒத்தடம் கொடுக்கும் - அவள்
கண்ணிரண்டும் வேல்களுக்குக் கூர் கொடுக்கும் - அந்த
ஈழப்பெண்ணொருத்தி இதயம் காய்ந்து நிற்கின்றாள் - இவள்
குங்குமத்தைக் குண்டுகள் தின்றனவோ
யாழ்வீடு ஒவ்வொன்றும் ஓலமிட்டால் - இவள்
ஓலமதைக் கேட்டிடத்தான் யாருளரோ.
முற்றமெல்லாம் மயானமானால் - நாட்டு விட்ட தமிழ்நெஞ்சு
பொங்கலுக்கு அடுப்பிட்டால் வேகாதோ?
வட்டினிலே ஷெல் விழுந்து குருத்துக் கருகியதால்
தோரணம் தேடி நீ திரிந்தால்
தென்னைதான் திட்டாதோ?
'அன்புடையார் என்புமுடையர் பிறர்க்கு'



குறள் கொடுத்த தமிழா! குணங்கெடல் சரியா?
கல் பேசும் கல் உளி கொஞ்சி
கல் மனம் கரையும் - தமிழா! குறள் கேள்!
புற்றரை யெல்லாம் குண்டு கிழித்துப்
புண்ணாகிப் போனதனால்
பொங்கலுக்குப் பால் கேட்டால் பசு பேசாதோ?
கற்பைக் காவல் நாய் மேய்ந்த
பெண் பெய்யும் கண்ணீர் - வெந்நீர் ஆகாதோ?
பன்னீர் பட்டால் உன் செந்நீர் கொதிக்காதோ?
குண்டுகள்தான் பொங்கலுக்குப் பயறுகளோ? இன்று
வீட்டு நாய்களை விருந்தினை மறக்குகையில்
நாட்டு மனிதர்நாம் கூரைக்குத் தீவைத்துக்
குறள் படிக்கலாமோ? குளிர் காயலாமோ?



நமக்கொரு நாடும் - நாளைக்கொரு விடியலும்
புத்தாடைக் கொண்டு வரும் - கொண்டாட வரும்
புத்தாடை புனைய ஒரு திருநாள் தேடி வரும்
' யாதும் ஊரே யாவரும் கேளிர் '
கனிவான குரல் கொடுப்போம் - கள்ளப்பகை மறப்போம்
பணிவான குணம் கொள்வோம் - பண்பான குலமாவோம்
பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே!
ஈழத்து மண்ணுக்கு இனியநற் பாட்டெடுப்போம்
கன்னித் தமிழ்மண்ணைக் காவல்வந்த [illegible].
போர்ப்புகை சூழ்ந்த பொல்லாத இருள் போக வரம் கேட்போம்,
மண்ணில் மழலைகள் மாலைகள் மாட்டி - வண்ணத்
தேரொன்றில் வருகின்ற சுதந்திரச் சுந்தரியை
சின்னஞ் சிறிசுகள் சிரிப்பினில் சுதி சேர்த்து
துதி பாடி வரவேற்க வழி பார்ப்போம்-

www.tamilarangam.net

பசு வந்து பானைக்குள் பால் பொழியும்
முற்றத்து மண்ணும் முத்தமிழால் வாழ்த்தும்
தென்னை தேடி வந்து தோரணமாய் ஆடும்
பார்த்திருக்கும் பனை பச்சரிசி கொண்டு வரும்
வேப்ப மரமங்கே வெண்தூவி அழகேற்றும்
மா பலா வாழை கனிச்சுவையைக் காற்றங்கே காவி வரும்
இளைய நம்நாடு புத்தாண்டில் இனிக்கும் ஓர் காலம் வரும்,
இரை எடுத்த பகை இனி இல்லாது போகும்
எட்டுக் கோடி தமிழ் நெஞ்சும் விண்ணை எட்ட விண்ணப்பம் செய்தால்
தேவனின் திருவாசல் திறக்காதோ? "கேளுங்கள் கொடுக்கப்படும்"
தாயின் வயிறொன்று நோய் கண்டு துடிக்குகையில்
தூக்கிய கையொன்று சுமந்த கையொன்று
சுமை தாங்கித் தவிக்கும் போது
ஆக்கிய மண்ணைக் காடாக்கிய கதை கேட்கும் போது
கண்ணின் நீர் அதனை யாருக்கையா விற்றீர்?
நம் அன்னையர் தாலாட்டில் நிலவு கண்மூடி - தடுமாறி - முகிலோடு மோதும்
அவள் அன்புக் குழையலை - கை பட்ட சோற்றுக் கவளத்தை
- தென்றல் தீண்டிப் பசியாறும்
சொந்த மண்ணில் சோக கீதம் - இந்த மண்ணில் நமக்கென்ன கொண்டாட்டம்
கூடிச் சிரிக்க வந்து நாம் கூடவில்லை
வாடிச் சோருகின்ற வங்காளத் தொடுகடலில்
ஓங்காரத் தமிழின் ஒய்யாரப் பிள்ளைகளை
கவியால் நலமாக - கண்ணீர்க் கவியால் இறைவனுக்குத் தூது விட
புத்தாண்டுக் கதிரொன்று முற்றத்தில் சமாதானத்தின் கோலங்களைப் பொறிக்க
கூடி வந்தோம் - சுதந்திர தீபம் தெரிகின்ற விடியலே - புத்தாண்டு
நல்லதொரு நாடு நாளை விடியும்
புத்தாண்டு புன்னகையாய்ப் பொலியும்
பொங்கு தமிழொரு ஓங்கு புகழ் காணும்
வாழ்க தமிழ் - வளர்க அன்பு.

**கண்ணப்பு நடராசா**

www.tamilarangam.net

# இதயத்திலிருந்து இதயம் வரை

"ஓர் இதயத்திலிருந்து இன்னோர் இதயம் சென்று சங்கமமாகும் உணர்ச்சி காதல்., சங்கமிக்கமுடியாது இடையில் தவிப்பது காதல் தோல்வி., ஓர் இதயத்திலிருந்தே புறப்படமுடியாமலிருப்பது?"

"நீங்கள் கட்டாயம் வரவேணும், உங்களை எதிர்பார்த்து நிற்பன் ஏமாற்றக்கூடாது.." தர்மினியின் இந்தவார்த்தைகள் என்னுள் திரும்பத் திரும்ப எதிரொலிக்கக் கடைசியாகக் கண்ணாடியின் முன்நின்று தலைமயிரையும், உடையையும் சரிப்படுத்திக்கொள்கின்றேன். இதுதான் கடைசிமுறை என நினைத்துக்கொண்டு மீண்டும் ஒருமுறை கண்ணாடியைப் பார்க்கின்றேன். என் முகத்தைக் கண்ணாடியில் உற்றுப்பார்க்கின்றேன்.. என்கண்கள் என்னை நேராகப் பார்க்கவே சங்கடப்படுகின்றன... உதடுகள் எதைஎதையோ சொல்லத்துடிக்கின்றது என் உணர்வுகள் பதட்டமாக வெளிப்படுகின்றன.

தயக்கத்தோடு புறப்படுகின்றேன்.. இன்று ஏனோ? எனது மோட்டார் சைக்கிள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

"MANY HAPPY RETURNS OF THE DAY" ....

வார்த்தைகளில் பரபரப்பு-அவசரம்.. ஏன் என் இதயம் பலமாக அடிக்கின்றது. முகத்தில் அங்குமிங்குமாக இருக்கும் வியர்வைத்துளிகளைத் துடைத்துக்கொள்கின்றேன். கேக்தட்டுடன் ஓர் உருவம் என்முன்னால் நிற்கின்றது. நிமிர்ந்துபார்க்கின்றேன். அந்தப்பார்வையிலும் அதே ஏக்கம் அதே தவிப்பு "நீங்கள் கட்டாயம் வருவீர்கள் என்று எனக்குத் தெரியும்" பதிலுக்கு, எனது இதயத்தின் அடியிலிருந்து ஓர் மெல்லிய புன்னகை. "தம்பி எப்ப வந்தனீர்? தர்மினி சொன்னவ நீர் கட்டாயம் வருவீரெண்டு, டிக்கட் ஓகே பண்ணீட்டீரே?" தர்மினியின் தாயாரின் குரல் என்னை நிஜ உலகிற்கு அழைத்து வருகின்றது. அன்று என்தானோ என் இதயம் கனப்பதைப்போல உணர்வு.. என் எண்ணங்களும் இதயமும் எதற்காகவோ துடிக்கின்றன... அதற்கான காரணம் இன்று என் முன்னாலேயே புத்தாடையுடன் சிரித்த முகமாய் எரிகின்ற விட்டினுள் எண்ணையை ஊற்றிக் கொண்டு நிற்கின்றது.

"ஏன் தம்பி ஒரு மாதிரி இருக்கிறீர்?, உடம்பிற்கு ஏதாச்சும்... மீண்டும் தாயாரின் குரல் என்னை நிதானப்படுத்த, "இல்லை அன்ரி, வெயிலுக்குள்ள திரிஞ்சதால லேசான தலையிடி" சமாளித்துக்கொள்கிறேன்.

"தர்மினி', தம்பிக்கு சுகமில்லையாம், ஓடிப்போய்க் கொத்தமல்லி அவிச்சுக்கொண்டுவா" தாய் உத்தரவு போட மகள் சமயலறையை நோக்கிப் போகிறாள். அமுதம் பருக வேண்டிய அவள் கையால் இந்தக் கொத்தமல்லித் தண்ணியா?-அது கூட அவள் கையால் பருகும்போது இனிக்கத்தான் செய்கிறது. "சிவா நத்தாருக்கு வாற நோக்கமில்லையோ?" கொத்தமல்லித் தண்ணீருக்கு உடன் சுகம் வந்தவன் போல் நிமிர்ந்து கேட்கிறேன்" வீட்டுக்குத் தங்கச்சிக்கு பேத்டேக் காட்டும், கடிதமும் அனுப்பியிருந்தார். கொழும்பிலையிருந்து இந்தப் பொடியளுக்காலையும், இந்தியாக்காரங்களிட்டையுமிருந்து தப்பிவாறது லேசுப்பட்ட காரியமே? நானே வரவேண்டாம் எண்டுதான் எழுதிப்போட்டனான், ஆசை அருமையா ஒரு தங்கச்சி, அதைப் பார்க்கக் கூட இந்தக் கோதாரிகள் விடுமே??"

சிவா என்னுடைய கல்லூரி நண்பன். எமது நட்பு பாலர் வகுப்பிலாரம்பித்திருக்குமென்று நினைக்கின்றேன். படிக்கும் நாட்களில் அவன் வீட்டுக்குப் போய் வருவதன் மூலம் வீட்டாருடன் நல்ல பழக்கம். தகப்பன் இல்லாத குடும்பம், பணக் கஷ்டம் வந்ததால் உயர்தரப்பரீட்சை ஒரு முறை எடுத்துவிட்டு கொழும்பில் சிறிய உத்தியோகத்தை எடுத்துக் கொண்டு போனவன்.. பாவம் சுய விருப்பு வெறுப்புகளையெல்லாம் தனது தங்கைக்காகவும், தாய்க்காகவும் விட்டுக் கொடுத்து உழைக்கிறான்.

இன்றைக்கு ஐந்து வருடத்திற்கு முன் நான் லண்டனிற்கு படிப்பிற்காகப் புறப்பட்ட போது அவன் விமானநிலையத்தில் வைத்து கூறிய வார்த்தைகள் இன்னமும் என் காதினுள் ரீங்காரமிட்டுக் கொண்டேயிருக்கின்றது. "நீ எந்த நாட்டிலும், எப்படியிருந்தாலும் எங்களை நீ மறக்க மாட்டாய் என்று நான் நம்பிறன். நீ எங்கடை குடும்பத்தில ஒரு ஆள்.. எங்களுடைய குடும்பத்திலையிருந்து நீ எதையாவது உனதாக்கிக் கொள்ளலாம்.. எங்களின்ரை உறவு என்றைக்குமே அழியக்கூடாது..." ஆழமான விடயத்தைச் சாதாரணமாகக் கூறி விடைகொடுத்தான். நான் ஒன்றும் பேசவில்லை, என்னால் பேசமுடியவில்லை. நான்தர்மினியை நினைத்திருப்பது ஒருவருக்கும் தெரியாதே, என் தர்மினிக்குக் கூடத் தெரியாது.. அப்படியிருக்க சிவா எப்படி இதைத் தெரிந்து கொண்டான். மனதில் ஓர் அற்ப ஆசை அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிவதா? அல்லது நீரூற்றி வளர்ப்பதா? என திண்டாடிக்கொண்டிருந்த வேளையில் சிவா கூறியது மேலும் மேலும் என்னைக் குழப்பியது. அதே வேளை நான் தர்மினியை காதலிக்கும் பட்சத்தில் எனது நண்பனிற்கு துரோகம் செய்கின்றேன் என்ற குற்ற உணர்வு மறைந்து ஒரு புத்துணர்வைத் தரத்தொடங்கியது. ஆம் சிவாவின் இந்த உரையாடலே தர்மினிமீது எனக்கு ஏற்பட்ட காதலைத் தூண்டத்தொடங்கியது.

தர்மினிமீது ஓர் ஆசை வளரும் அதே வேளையில் அவளின் வீட்டுக்கு சிவாவைத் தேடி அடிக்கடி போய்வந்தபோது என் அப்பா கூறியது மனதில் உறுத்தாமல் இல்லை. "குமார் சிவா உன்ரை நண்பனாயிருக்கலாம். பரவாயில்லை. ஆனால் நீ அவன் வீடு தேடிப்போய் உறவு வைப்பதை விரும்பவில்லை, ஊர் பல மாதிரிக் கதைக்கும். நான்எதையும் ஒரு முறைதான் சொல்லுவன்...." அப்பா தனது கருத்தை தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டார்.

"ஊர் என்னப்பா ஊர்?? நாங்கள் எங்களின்ரை சொந்த மனசாட்சிக்கு சரியாக நடந்தால் சரிதானே? நான் மனதுக்குள் நினைத்துக்கொண்டேன். ஆனால் வெளியில் சொல்லவில்லை. எனெனில் நாங்கள் கௌரவத்தால் உயர்ந்தவர்கள். அதனால் எமது எண்ணங்களை நாம் வெளியில் கூறிக்கொள்வதில்லை.

www.tamilarangam.net

தர்மினி உன்னை அடைய வேண்டுமென எனக்கு ஓர் விபரீத ஆசை, எப்போ தெரிந்தோ, தெரியாமலோ ஓர் ஆசையை வளர்த்து விட்டேன், ஐந்து வருடங்களின் பின்பும் ஆயிரம் மைல்களுக்கப்பாலிருந்து கூட. என்னால் அதை நசுக்கித் த விட முடியவில்லை. எனக்குள்ளேயே ஆனந்த ராகமாயிருக்கும் உன் நினைவுகளை நான் தினம் தோறும் உணர்ந்து மகிழ்கின்றேன். புனிதமான அந்த ஆனந்த ராகத்தைச் சோக முகாரி ராகமாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை நீ ஓர் விளக்கின் ஒளியைப் போன்றவள்.. தூரத்தில் நின்று ரசிக்க உனது நினைவு எனக்கு எதோவொரு இன்பத்தைத் தருகின்றது. உன்னை நெருங்கி வருவதன் மூலம் என்னைக் காயப்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை.

நெருப்புச் சூடும் என அதைத் தொட்டுத்தானா உணரவேண்டும்? ஆம் நான் நெருப்போடு விளையாடுகின்றேன். ஒரு பாவிப் பெண்ணின் இதயத்தோடு விளையாடுகின்றேன். நீ என்னை ஒரு படி மேல் வந்து விரும்புவதை என்னால் இன்று நன்கு உணர முடிகிறது. உன்னுடைய பார்வையும் சிரிப்புமே எனக்கு இதைத் தினம் தோறும் இப்போது சொல்லாமல் சொல்கிறதே. நான் எல்லாவற்றையும் நன்கு உணர்கின்றேன். தர்மினி நன்றாகவே உணர்கின்றேன். "நீங்கள் கட்டாயம் வரவேணும் எதிர்பார்த்து நிற்பேன், ஏமாற்றக்கூடாது" என உன்னுடைய பிறந்தநாளுக்கு மட்டுமா என்னை அழைத்தாய் இல்லை உன் வாழ்க்கைத் துணையாகத்தான் அழைத்தாய்.. உன்னுடைய மனதை என்னால் நன்கு வாசிக்க முடியும். அதில் எந்தப் புறத்தை திருப்பினாலும் அதில் என் பெயர் தான் பதிந்திருக்கும். இவ்வளவு அறிந்திருந்தும் நான் ஏன் இவ்வளவு தயங்குகின்றேன் என்று கேட்கின்றாய். ஆம் நான் தயங்குகின்றேன்.

சரி நாம் எமது எண்ணப்படியே ஒருவரை ஒருவர் மனதாரக் காதலிக்கின்றோம் என வைத்துக்கொள்வோம். நாளை என்வீட்டார் இதை அறியும் பொழுது??? நிச்சயமாக வீட்டிலுள்ள அனைத்தவரின் உறவையும் நான் இழக்க வேண்டிவரும், அதையும் தாங்கி நான் உன்னை அடையத் துணிவேனாகில் எனது குடும்பத்தை எதிர்த்து உங்களால் எப்படி நிற்க முடியும்? பணம் பத்தும் செய்யும் என்பார்களே அதுவும் ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், விடயத்தில் ஐம்பதாகச் செய்யுமே. அந்தஸ்து, கௌரவம், சாதி, குடும்பம் என்ற மேடையில் தான் என்னைப்போன்ற பலர் தமது சுய உணர்வுகளையும், அபிலாசைகளையும் மறைத்து பார்வையாளர்களுக்காக வேடம் போடுகிறார்கள்.. பார்வையாளர்கள் கலைந்தாலும் நாம் வேடத்தைக் கலைக்கமாட்டோம். என்னைப் பற்றி எண்ணும்போது சில வேளைகளில் எனக்கே வெறுப்பு வருவதுண்டு. இந்தக் காரணத்திற்காகத்தான் தர்மினி நான் கோழையாகக் கைகட்டி நிற்கின்றேன்.. மதில் மேல் பூனை போல் இருக்கின்றேன். ஒரு வேளை நீ நினைக்கலாம் இந்த மாயை உலகை உதறிவிட்டு ஒரு ராமன்மாதிரியாக வரமாட்டேனா என்று.. ஆனால் தர்மினி வரும் கால உறவிற்காக வந்தகால உறவுகளை உதறித்தள்ளுவது எந்த வகையில் நியாயமாக இருக்கும். எனக்கு வந்த உறவும் நிலைக்க வேண்டும். வரத்துடிக்கும் உறவும் கைகூடவேண்டும். எனக்கு அவளை விட்டுக்கொடுக்கவும் விருப்பமில்லை, போராடிப் பெறவும் உறுதியில்லை.. இதற்கு என்னதான் முடிவாகப் போகின்றது? ஆனால் ஒன்று மட்டும் முடிவாக்கிவிட்டேன், நான் லண்டனிற்கு திரும்பிப் போகும்போது இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், அல்லது கதை தொடர வேணும். நேரத்தைப் பார்க்கின்றேன் 6 மணியாகிவிட்டது. தலையிடியென்று சொன்னதால் சற்று எனது நிலையை கற்பனை செய்து பார்க்கக் கூடியதாக இருந்தது. மாலை 6 மணியாகியதும் வீட்டினுள் இருக்கவேண்டும் என்ற நம் தலைவிதிக்கு நான்மட்டும் என்ன விதிவிலக்கு? என்னையும் சுட்டுவிட்டு புலியென்று கூற இந்தியக்கூலிப் படைகளுக்கு எத்தனை செக்கன் பிடிக்கும்.

"தம்பி, கடைசி நேரம் வரைக்கும் நில்லாமல் பிளேட்டுக்கு ஒருகிழமைக்கு முதலே கொழும்பிலை போய்நில்லும். இங்கை என்ன எப்போ நடக்குமென்று சொல்ல ஏலாது!"

"அங்கை மட்டும் இப்ப சொல்ல முடியுதே?" தர்மினி தனது கருத்தையும் கூறிவிட்டாள். "ஓம் அண்ணை இன்னுமொரு 15 நாளாலை வெளிக்கிடலாமென்டு யோசிக்கிறன், அப்ப பிளேட்டுக்கு சுகமாய் இருக்குமென்டு நினைக்கிறன். அப்ப சரி போயிட்டு வாறன், ஓமென்றால் நாளைக்கு வாறன்".. அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மோட்டார் சைக்கிளை நோக்கி வருகின்றேன். யாரோ பின்னால் வரும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கின்றேன். "தர்மினி ...என்ன..." அவள் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டு எனது பதிலுக்குக் காத்திராமல் போகிறாள். ஆம்நான் எதிர்பார்த்தது தான். அவள்தனது கருத்தையே கடிதவாயிலாக துணிந்து கூறிவிட்டாள். என்னிடம் அதற்கு என்ன பதில் இருக்கின்றது?..

வீட்டிற்குச் சென்று பலமுறை அக்கடிதத்தை வாசித்துக்கொள்கின்றேன். அந்த நேரத்தில் அந்தக் கடிதத்தை ரசிக்கமுடிந்ததே தவிர, பதில் தேட முடியவில்லை. குமார் அண்ணா, என்று கடிதத்தைத் தொடங்குவதற்காக என்னை மன்னிக்க வேண்டும், எமது உண்மையான காதலிற்கிடையில் அந்தப்போலியான சொல் தேவையில்லையென்றே நினைக்கின்றேன். நான் உங்களின் காதலைப் பெற வேண்டும் என்ற ஆசை அடைந்ததில் ஏதும் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் நீங்கள் என்னை விரும்புவதை என்னால் நன்கு உணரமுடிகின்றது. எனக்கு மனதில் பட்டதை எழுதுகிறேன். எனக்கு இது காதல் கடிதம் போலத் தெரியவில்லை, எனது இயலாமையைத் துண்டுப்பிரசுரத்தில் வாசிப்பது போல உணர்ந்தேன்.

நான் எப்படி இதற்கொரு முடிவை எடுக்கப் போகிறேன்? எனக்காக மட்டுமிருந்தால் நான் முடிவெடுப்பேன். இது எனது குடும்ப கௌரவம் என்ற அறியாப் பதத்தை நிர்ணயிப்பதால் முடிவெடுக்கும் திறமை என்னிடமில்லை. என்னால் என்ன செய்வதென்றே தெரியவில்லை. வாயில்லாப்பிராணிகள் கூட தமது சுதந்திரத்துக்காக அடைக்கலமொன்றையும் விரும்புவதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[illegible] தத்தைக் [illegible] பார்க்கின் [illegible] சிரித்திருக்கின்றன. [illegible] வும். என் உணர்ச்சிகளை [illegible] காதலாயிருக்க [illegible] முயற்சிக்கவேயும் [illegible] த்துக்கொள்கின்றேன்.

பார்த்த ஏமாற்றம் இல்லை. அதிர்ச்சியில்லை, அழுகையில்லை, பதிலாக அவள் கண்களில் ஒரு தெளிவு. நான் சொன்னதை அவள் நம்பிவிட்டாள் போலவும். அதுமட்டும் எனக்குக் கிடைத்த பெரும் வெற்றிதான். "நான் தான் உங்களைத் தப்பாய் விளங்கிட்டன்.



எடுத்த முயற்சியுடன் [illegible] வீட்டை நோக்கிப் போகின்றேன்.

"[illegible], .. [illegible] பிரயாணம் [illegible] வந்தது. [illegible] முடிவை என்றும் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. [illegible] நான் உங்கள் [illegible] தொடர்ந்து [illegible] நினைக்கின்றேன். நீ என்னைக் காதலியா [illegible] ஏற்றுக்கொள்ளவில்லை. [illegible] [illegible] எதிர்பார்த்த [illegible].

என்ன ஆச்சரியம், [illegible]

என்னை நீங்கள் மன்னிச்சுக்கொள்ளட்டும். என்னுடைய என்னுடைய கணக்குத் தப்பாயிற்று என்று நினைக்கிறன்."

"அதைப்பற்றிப் பயனாயில்லை, நான் [illegible] ஒரு கெட்ட கனவாய் நினைத்து மறக்கிறன். எனக்கு பொறுமை [illegible] இருக்கிறது. நான் அவளிடம் விடை பெறவில்லை, என் கண்கள் கலங்குகின்றன [illegible] .. [illegible] [illegible]

## காயத்திரி கொன்ஸ்ரன்ரைன்

[illegible] பார்க்குவீர்களே.
[illegible] படையைத்
[illegible] போகிறாம்.
[illegible] விடிவு [illegible]

[illegible] கிடக்கு,

[illegible]: [illegible], [illegible] நிருபர்
[illegible] குப்பிட்டு, அதுப்பிறம்
[illegible] கிடைக்காமலை
[illegible]
[illegible]
[illegible].



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையின் பிரதேச தேசியவாதம்

## ஒரு அரசியல் வரலாற்று மீள்பார்வைக் கட்டுரை

தேசிய வாதம், குறித்த ஒரு நாட்டுக்கோ அல்லது இன, மற்றும் மொழி, மத கலாச்சாரத் தொகுதிக்கோ, மாத்திரம் உரியதல்ல. ஏதோ ஒரு வகையான பூகோளத் தொடர்ச்சியும், பொதுவான ஒரு சமுகவியல் குறியீட்டுக் தன்மையதுமான ஒரு வடிவத்தில் இணைந்து கொண்ட எந்தவொரு மக்கள் கூட்டத்தினருக்கும் உரியதாகும். எங்கு பலம் வாய்ந்த ஒரு சமூகப்பிரிவினர் பின்னொரு பகுதியினரை நசுக்கும் நிலை ஏற்படுகிறதோ அங்கு தேசியவாதம் வெளிப்படுவது தவிர்க்கமுடியாததாகிறது. இந்த வகையிலே உலகளாவிய தேசியவாத நோக்குகள் முனைப்பெடுத்து வெற்றி கண்டன. நவீன காலத்துக்கு வழி விட்ட ஐரோப்பிய மறுமலர்ச்சியைத் தொடர்ந்து நாட்டிடைத் தேசியவாத உணர்வுகள் தம்மை இனங்காட்ட வெளிப்பட்டன. இதன் விளைவு, பல்வேறு அரசுகள் உருவாக்கம் பெற்றமையை ஐரோப்பிய வரலாற்றுப் பரப்பில் அடையாளங் காண்கின்றோம். தவிர, மத்திய கால ஐரோப்பிய வல்லரசுக்களின் ஆள்புலப்படர்ச்சிக்கு உட்பட்டிருந்த ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கப் பிராந்திய நாடுகளில் தத்தமது விடுதலைக்காகத் தேசியவாத உணர்வுகளை வெளிப்படுத்தியமையும் நாம் அறியாமல் இல்லை.

எமது நாடும் 1505 இல் இருந்து குடியேற்ற ஆதிக்க நிலையில் அந்நியரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. போத்துக்கேயரும் அதனைத் தொடர்ந்து ஒல்லாந்தர், ஆங்கிலேயரும் இவ்விதம் எம்மை நிர்வகித்து வந்தனர். இறுதியாக ஆங்கிலேயர் காலத்திலே தேசியவாத நோக்குகள் படிப்படியாக முளை விடத் தொடங்கின. எமது நாடும் சமூக அமைப்பில் ஒரினமானதன்று. பல்வேறு சமுகக்கூறுகளைத் தன்னகப்படுத்தியது. இருந்தபோதும், இன, மொழி, மத வேறுபாடுகள் அப்போதைய தேசிய ஒருங்குசேரலில் எவ்வித இடையீடும் செய்யவில்லை. இதனால் நாம் "இலங்கையர்" என்ற பொதுவான ஒரு தேசியவாத சிந்தனை மக்களை வழிநடத்தின. தேசிய சுதந்திரப் போராட்டக் காலத்தில் கனவான்கள் பொன்.இராமநாதன், பொன்.அருணாசலம் சகோதரர்களின் தீவிர பங்களிப்புக் காணப்பட்டமை இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

நாம் இலங்கையர் என்ற பொதுநோக்கில் பெற்றுக் கொண்ட தேசியக் குழந்தை சுதந்திரத்தையடுத்து நீண்ட காலம் உயிர் வாழ முடியவில்லை. மற்றைய நாடுகளைப் போலல்லாது எமது தேசிய நோக்கும், பெறுபேறும் சுகப்பிரசவத்திலே முடிவடைந்தது. ஆனாலும் அது துள்ளி விளையாட ஆரம்பிக்கு முன்பே இன மொழி மத இடையீடுகள் அதைச் சாகடிக்கத் தொடங்கின. காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த அரசுக்கள் தமது பதவி நலனுக்காகச் சமூக பேதங்கள் சார்ந்த பஜனைகளை இசைக்கத் தொடங்கின. அத்துடன் நடைமுறையிலும் சிறுபான்மையினரின் நலவுரிமைகளைப் பாதிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டன. இது சிறுபான்மையினர் மத்தியில் சந்தேகத்தையும், அதே வேளையில் அச்சத்தையும் ஊட்டியது. இதுவே நாம் எம்மை அடையாளங் காட்டவேண்டுமென்ற வடக்கு கிழக்கு மக்களின் சுயநிர்ணய மற்றும் தாயக வாதத்திற்கு வழி சமைத்தது.

இலங்கையின் பிரதேச தேசியவாதம் எடுத்த மாத்திரத்திலே வில்லங்கத்திலோ அல்லது பலாத்காரப் பாவனையிலோ முனைப்பெடுத்ததன்று. சாம பேத தானம் என்ற அகிம்சா வழிகளில் வாய்ப்புப் பார்க்கப்பட்டு வந்த ஒன்று தான். இதைப் போய் நடைமுறை யதார்த்தத்தைப் புரியாத வல்லது புரிந்தும் அதனை ஜீரணிக்க முடியாத பேரின அரசும், சகோதர பேரின சமூகமும் பயங்கரவாதம், பிரிவினைவாதம் என்ற இலச்சினைகளைப் பொறித்தனர். இது, உண்மையை மறுதலிக்கவும், தேசியவாத நோக்கினை மழுங்கடிக்கச் செய்யவுமான ஒரு அரசியல் யுத்தி மாத்திரமே. இங்கு பிரதேச தேசிய வாதம் வேண்டி நின்றது பிரிவினை "தாயகவாதம் தேவைப்பட்டதல்ல, சமகால அரசியல் வரலாற்று நிர்ப்பந்தங்களின் பிரசவிப்பே" அல்ல. அத்துடன் பயங்கரமான வெறித்தனத்தைக் கட்டவிழ்த்து விட வேண்டுமென்ற நோக்கம் இது கொண்டதல்ல. வேண்டியதெல்லாம் இழந்த மற்றும் பறிக்கப்பட்ட உரிமைகளின் மீளப்பெறுகை, பாதுகாப்பின் உத்தரவாதம், தேசிய நீரோட்டத்தில் உரிய இடம்பெறுதலும்பற்றியவையே.

சிறுபான்மை இலங்கைத்தமிழர்களின் பிரதேச தேசியவாத வளர்ச்சி நிலையில் இருவேறு போக்குகளை அடையாளத்துவம் செய்யலாம். அவை, காந்தீய வழியிலான இணக்கப்பாடும் போராட்ட முனையிலான தீவிர செயற்பாடும் ஆகும். தேசிய வாழ்வில் இலங்கை வாழ் தமிழர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். சுதந்திரத்திற்கு முன்பும் அதையடுத்து முதல் சுதேசிய அரசுக்கால முடிவு வரையில் இத்தகைய தன்மையை அவதானிக்கலாம். இந்த வகையில் அரசியல் விடுதலை, நிர்வாக வழி நடத்தல், பொருளாதார சுபீட்சம் காணல் என்பதாக அவர்களது தேசாபிமான ஈடுபாடு முன்னெடுத்துச் செல்லப்பட்டன. தவிர, சகோதர பேரின சமூகத்துடனும் அரசுக்களுடனும் சமாதான, சௌஜன்ய உறவுகளையும் பேணி வந்தனர். இருந்த போதும் அரசினரின் கால வரையிலான சில சட்ட ஏற்பாடுகளும் நடவடிக்கைகளும் தேசாபிமான சிந்தனைகளைத் தளர்வடையச் செய்தது. இந்திய சமுகத்தவரின் குடியுரிமைப் பறிப்பு, சிங்களம் மட்டும் சட்ட அமுல், சிறுபான்மையினர் மத்தியிலான பேரின சமுகத்தின் குடியேற்றக் குவிப்பு போன்றவை மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கைகளாகும். இதனால், சிறுபான்மைத் தமிழர்கள் தம்மை வேறாக அடையாளங்காட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இதற்காக, எதிர்ப்பு ஊர்வலங்கள், மறியல் போராட்டங்கள், பாராளுமன்றப் பகிஷ்கரிப்புப் போன்ற ஜனநாயக வழிமுறைகளை நாடினர். இவையும் அரசினரின் ஆயுத அடக்கு முறைகளினால்

www.tamilarangam.net

தமிழர்கள் பிரதிநிதித்துவங்கள் காந்தீய வழிநடத்தலின் இறுதிப் பரிகாரமாக பிறிம்பான அதேவேளை சேர்ந்தவொரு அங்கமாக இயங்குவதைப் பரீட்சித்தன. இங்கு தமக்கான சில தேசிய சுய கௌரவங்களைத் தானம்செய்து பங்குதாரர் என்ற நிலையில் இணைந்து செயலாற்றினர். பிராந்தியக் கட்சிகளைத் தமக்காகப் பிரதிநிதித்துவம் செய்தபோதும் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசுக்களுடனும் கூட்டை ஏற்படுத்தியிருந்தார்கள். அமைச்சரவை மற்றும் முன்னைய செனட் அமைப்பு எல்லாம் இவ்விதமாகத் தமிழர்கள் பிரதிநிதிகள் அங்கம் பெற்றனர்.

திருவாளர்கள் நல்லையா, திருச்செல்வம், குமாரசூரியர், நடேசன், நீதிராஜா, போன்றவர்களை இப்பட்டியலில் சேர்க்கலாம். இங்கும் சிறுபான்மைத்தமிழர்கள் நலனுக்கு விரோதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டே வந்தன. நில ஊடுருவல், செயற்கையான நிருவாக ஆள்புல எல்லை மாற்றங்கள், தரப்படுத்தல் முறையிலான பல்கலைக்கழக அனுமதி, அரசசேவை ஆட்சேர்ப்பில் நீதியின்மை, பாரபட்சமான வெளிநாட்டு உதவிப் பங்கீடு போன்றவை மேற்கொள்ளப்பட்ட இவ்விதமான பாரதூரமான நடவடிக்கைகளாகும்.

எழுபதுகளின் பிற்கூற்றில் அரும்பி 1983 ஆடிக்கலவரத்தில் முகை திறந்த இனவாத நெருக்குதல்கள் சிறுபான்மைத் தமிழர் சமுகத்தின் சிந்தனையை மாற்றியமைத்தது. இதனால், மிதவாதத்தின் செல்லாத்தனத்தை இனங்கண்டு போராட்டம் என்ற முடிவுக்குத் தம்மைத் தயார் செய்தனர். தம்மத்தியிலான அரசியல்கட்சிகளும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களும் வெறும் பயனற்ற அமைப்புக்களென உணர்ந்தனர். இங்குதான் அவர்களின் தாயக உணர்வும், பிறிம்பான தேசிய இனம் என்ற தாகமும் உட்போந்த பிரதேச தேசியவாதம் வடிவமைக்கப்பட்டது. இதற்காக ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். இந்த விவகாரத்தில் பூகோள மற்றும் தேசிய அக்கறை கொண்ட பாரத அரசும் ஆயுத மற்றும் தார்மீக ஆதரவினை வழங்கின. தவிர, பேரின அரசின் அரசியல், மற்றும் இராணுவ நடத்தைகளால் சர்வதேச அனுதாபமும் கிட்டத் தொடங்கின.

இந்தோ-சிறிலங்கா சமாதானத்திட்டத்தின் கீழ் தமிழர் தேசியவாதம் பரீட்சாத்த இடைநிறுத்தல்களுக்குட்பட்டுள்ளது. இதன்கீழ், வடக்கு கிழக்கு இணைந்த பிராந்திய ரீதியான சுயநிர்ணய தீர்மானிப்புக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதும், அதிகாரப்பரவலாக்கல், செயற்திட்டங்கள், உரியவிதத்தில் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது சந்தேகமானதே. வாக்குறுதி கொடுத்தவையும் பின்னர் ஒருவேளை சூழ்நிலையின் இடையீடு எனப் பேரின அரசினால் நியாயப்படுத்தப்படலாம். தவிர, தமிழர் தேசியவாதத்தின் முதற்பங்காளியான புலிகள் அமைப்பு, வெறுக்கப்பட்டிருப்பது ஆரோக்கியமான சூழ்நிலையைத்தராது போகலாம். இதேவிதமாக ஈரோஸ் போன்ற அடுத்தமைந்த அமைப்புக்களின் தியாகங்களும் மறப்பதற்கில்லை. தத்துவார்த்த ரீதியாகச் செயற்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்களிப்பும் இங்கு கவனத்திற் கொள்ளலாம்.

எனவே புதுதில்லி, கொழும்பு, அரசுகள் ஒதுங்கியிருக்கும், ஒதுக்கப்பட்டிருக்கும், சகல தரப்பினரின் பிரசன்னத்தையும் எதிர்பார்க்கையையும் கவனத்திற் கொள்ள வேண்டும். பாரதம் வெறுமனே தமது பிராந்திய நலனையும், இலங்கை அரசு தமது பதவிநலனையும் மாத்திரம் கருத்திற் கொண்டு செயற்படுவது தவிர்க்கப்பட வேண்டும். மாறாக இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை எல்லாம் பிரச்சனைகளின் உட்படுகைகள், யதார்த்த அணுகுதல், முறையான செயற்படுத்துதல் போன்றவையே. எனவே, இந்த விவகாரத்தில் பரிகாரம் தர வேண்டிய பாரத, இலங்கை அரசுக்கள் இதய சுத்தியுடனும் யதார்த்த நோக்குடனும் செயற்படுவதே, ஆரோக்கியமானதும் நிரந்தரமானதுமான அமைதியை ஏற்படுத்துமென எதிர்பார்க்கலாம்.

பரராசசேகரம்

சங்கீத வயலின் வகுப்புக்கள்

ஆரம்பம் 5.2.1989

ஆசிரியைகள்

அருந்ததிதேவிரட்ணசிங்கம் (சங்கீதம், வயலின்)

பிரேமா தயாளன் (சங்கீதம்)

ஆசிரியதராதரப்பத்திரம்

வட இலங்கை சங்கீத சபை

தொடர்புகளுக்கு

01-531-0337

அல்லது

23 CHINGFORD ROAD,
WALTHAMSTOW,
LONDON E17 4PW.

www.tamilarangam.net

# மௌனம் கலைந்த மலர்கள்

மனிதன் எம் மௌனத்தைத் தவறாக அர்த்தப்படுத்திய அகராதி
இந்தப் பூக்கள் தாவரத் தாய்மையின் பூரிப்புக்கள்
கனிகளின் கர்ப்பத்தைச் சுமக்கும் கருவறைகள்

வண்ணங்களும் வாசங்களும் எங்கள் வரப்பிரசாதங்கள்
தேன் முனைகள் தெரிய ஆடைகளை அவிழ்த்து
வாசங்களை விடுத்து வண்டுகளை வரவழைப்பதுண்டு
எங்கள் கர்ப்பப்பைகள் கர்ப்பம் தரிப்பதற்காக
ஆடைகளை அவிழ்த்த அடுத்த கணத்தில் - உங்களால்
கத்தரிக்கப்படுவதற்காக அல்ல.

நாரினால் தொடுக்கப்பட்ட நாங்கள் - உங்களால்
(மாலையென) மதிக்கப்படுவதுண்டு.

நாரின் சுருக்குகளுக்குள் கழுத்தைக் கொடுத்துவிட்டுத்
தொங்கிக் கொண்டிருக்கும் தூக்குத் தண்டனைக் கைதிகள்
அல்லவா நாங்கள்?

மரணத்திற்கு முன், எம்மைச் சுமந்து, காம்புகளுக்கு ஓர்
கனியைக் காணிக்கையாக்கிவிட்டு, உலர்ந்து போக
மலர்ந்தவர்கள் நாங்கள் என்பதை நீங்கள்
எப்போது உணர்வீர்கள்.

பொன்னையா. விவேகானந்தன்
தமிழ்ப்பல்கலைமுதுநிலை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

www.tamilarangam.net

# அவனுக்கென்றோர் மனம்

காலைச் சூரியன் தன் பொற்கிரணங்களைப் பரப்பிய வண்ணம் துயிலெழுகின்றான் தன் பணியைத் தொடர்வதற்காக. பன்ப்புகார்கள் தம் வசதிக்கேற்ப ஆனந்தக்கூத்தாடி மகிழ்கின்றன. புள்ளினம் ஆதவனைக் கண்ட ஆனந்தத்தால் கல்யாணி இசைத்தன.

தமிழீழத்தின் தலைநகரம் களைகட்டத் தொடங்கியிருந்தது. மாணவ, மாணவியர் பாடசாலைக்குச் செல்வதற்காக புற்றில் இருந்து புறப்படும் செல்கள் போல் சிலம்பிக்கொண்டிருந்தனர்.

அதோ!...

ஒரு அழகிய பெண்மான்... தன் விழிகளை நாலாபக்கமும் சுழல விட்டபடி தோழியருடன் கூட அன்ன நடைபயின்று பஸ்தரிப்பு நிலையத்திற்கு வருகின்றாள். அங்கு நின்று கொண்டிருந்தவர்களின் அத்தனை ஜோடி விழிகளும் ஒருகணம் இமைக்க மறந்தன. சில வாலிபவாய்கள் மூடமுடியாமல் தவித்தன. இதற்கெல்லாம் காரணம் அம்மானின் அழகு. அழகிற்கு இலக்கணம் கூறும் அழகு. அவளின் விழிகளைப் பார்த்தபின்தான் பிரமன் கயலைப் படைத்தானோ?.. என்னவோ?

புத்தகங்களை மார்புடன் அணைத்த வண்ணம் எதையோ தேடுகின்றது அந்தக் காரிகையின் விழி. யாரைத்தான் தேடுகின்றதோ?....
அவளின் விழி அலைகள் தவழ்ந்து சென்று ஓரிடத்தில் நிலைக்கின்றது. அந்த விழியில் ஓர் ஏக்கம், தாபம், மகிழ்ச்சி எல்லாம் மாறிமாறி தோன்றுகின்றன. பல கேள்விகளுக்கெல்லாம் விடையையும் அவை எதிர்பார்ப்பனபோல் தோன்றுகின்றன.
எத்தனையோ மொழி இதயங்கள் அவள் கடைக்கண் பார்வைக்காக ஏங்குகின்றனவே, அப்படி இருக்கையில் அவள் மனம் யாருக்காக தவம் கிடக்கிறது? வேறு யாருமல்ல.....
அவளுடைய தோழி ரதிக்காகத்தான். பெண் பெண்ணிற்காக ஏங்குவதா? சற்று நெருங்கித்தான் பார்ப்போமே...! மாறுபட்ட செய்கையாக இல்லை?

ரதியும், சற்று பிரமிட்ட விழிகளுடன் ஒரு கடிதக்கவரை அம்மானின் கரங்களில் திணிக்கின்றாள். அந்தப் பேதையும் கலங்கிய நெஞ்சத்துடன் கவனமாக அக்கவரை பிரித்துப்படிக்கின்றாள்.

என் இதயராணி ரேகாவிற்கு!,

என் வரவை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்திருப்பாய் என்பது எனக்குத் தெரியும். என் மீது நீ கோபமடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. உன்னைக் காணாமல் நான் எப்படி இருந்திருப்பேன் என்பதைச் சிந்தித்துப் பார்த்தாயா? நான் ஒன்று சொல்கிறேன். உன் மாமா எவ்வளவு பொருத்தமானவராக இருக்கிறார். எனக்கு எவ்வளவோ கொடுமைகள் செய்தார்கள். எல்லாவற்றையும் உனக்காகப் பொறுக்கச் சொன்னேன். [illegible] நாளை காலை [illegible] என் [illegible] உனக்காகக் காத்திருக்கிறேன்.

உன் அன்புடன்
ரகு.

ரேக்காவின் விழிகளில் நீர் திரையிட்டது. ரதியின மிரட்டல் பார்வையால் சுயநிலையடைந்தாள். ரகுவை இதயத்தில் சுமந்து கொண்டு சென்றாள். ரகு மறுநாள் காலை பஸ்தரிப்பு நிலையத்தை நோக்கிச் சென்றான்.



அவன் ஒரு பல்கலைக்கழக வைத்தியத்துறை மாணவன். ஆறாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தான். தாயார் ஒரு ஆங்கில ஆசிரியை. தந்தை உதவி அரசாங்க அதிபர். ரகு தான் அவர்களுக்கு ஒரே பிள்ளை. அவனது பெற்றோர் அந்தக்காதலுக்கு எவ்வித தடையுமில்லை. சுருங்கக்கூறின் அவனுக்கு அவர்களே ஆறுதல். ஒவ்வொரு நாளும் ரேக்காவுடன் பஸ்ஸில் சென்று அவளைப் பாடசாலையில் விட்டுவிட்டுத் திரும்பிவிடுவான். பஸ்ஸில் தான் அவர்களது மனதைத் திறந்து கொட்டச் சந்தர்ப்பம். அன்றும் அவ்வண்ணமே சென்றான். ரேக்காவோ அவன் வரும் வீதியை நோக்கிக் காத்திருந்தாள். திடீரென அவள் சந்திரவதனம் பூத்தொளியில் மிதந்தது, ரகுவைக் கண்டதால் தான். பஸ்ஸிலுள்ள அவர்கள் கதைப்பதை எத்தனையோ பேர் பொறாமையுடன் நோக்குகின்றனர். இது வழமையாக நடைபெறுகின்ற சம்பவமாதலால் சிலர் கண்டும் காணாமல் நிற்கின்றனர்.

"ரேக்கா"

"ம்... ம்"

என்னோடை கதைக்கமாட்டியா?"

"எப்பிடியாம் கதைப்பன்... எங்களை ஒரு [illegible] பார்த்துக்கொண்டிருப்பினம், சொல்லுங்கோ [illegible]?"

www.tamilarangam.net

"உனக்கு மட்டுமாடா? எனக்கு அந்த வேதனை இல்லையா? சரி, அதிருக்கட்டும் எப்ப கம்பசுக்குப் போறீங்க"

"நாளைக்குப் பின்னேரம்.. என்னம்மா முகம் மாறிப்போச்சு?.. இன்னும் ஆறுமாதம் தானே இருக்கு சோதனைக்கு அதுக்குப்பிறகு நான் ஒரு டொக்டர். அப்ப என்ன செய்யினம் பார்ப்பம் உங்கடை மாமா ஆக்கள்."

"ஏன் ரகு அவ்வளவுநாள் பொறுத்துக்கோணுமா இந்த நரகத்தில் இருந்து என்னை கெதியா கூட்டிக்கொண்டு போங்க ரகு.. எனக்கென்னமோ பயமாயிருக்கு".

"ஒண்டும் நடக்காது, ரேக்கா இப்பத்தான் நாங்க மனதைத் தளரவிடக்கூடாது."

"என்ன இருந்தாலும் நீங்க ஆம்பிளை, உண்மைதான், அதுக்குப் பொம்பிளையள் கோழையாகிறதா?" "உங்களுக்குச் சமஉரிமை இருக்கிறது, தரப்படவும்வேணும். இனிவரும் காலங்களில் அது கண்டிப்பாக நடக்கும்." "உங்கள கதைக்கவிட்டா, நடைமுறைக்கு ஒத்துவராததெல்லாம் கதைப்பீங்க"

தங்களையும், சூழலையும் மறந்து சுவாரசியமாக அளவளாவிக்கொண்டிருந்தனர் அந்த இளம் காதல்மலர்கள் பிரிய மனமின்றி பாடசாலை வந்ததும் பிரிந்து சென்றனர்.

ரேக்கா ஓர் இந்திய வம்சாவளிப்பெண். தாய் இல்லை, தந்தை தலைநகரில் தலைமை அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். பெண்ணைப் பெற்றுவிட்டார், வளர்க்க அவருக்குத் தெரியவில்லை. ரேக்காவும் அவர்களுக்கு ஒரேபிள்ளை அவருக்கும் இந்தக் காதல் விவகாரம் தெரிந்தும், ரேக்காவுக்கு நேர்ந்த கொடுமைகளைக் கண்டும் ஏதோதானோ என்று இருந்து விட்டார். இப்படி ஒரு அப்பன் தேவையா? ரேக்காவின் மாமன் குடும்பமும், ரகுவின் குடும்பமும் மிக அன்னியோன்யமாக இருந்தது. இப்போ வெட்டுப்பகை. காதல் அவ்வளவு காரசாரமோ ரேக்காவிற்கு ஏராளமான சொத்துக்கள் உண்டு. அவற்றை அடைவதற்காகவே இக்காதலுக்குத் தடையாக நிற்கிறார்கள். சாதியும் ஒரு காரணம். வேறு ஒருவனுக்கு மணம்முடித்துக்கொடுத்துவிடவேண்டும் என்பதே அவர்கள் குறிக்கோள். அதில் குறியாகவும் இருந்தார்கள் ரகு பேராதனை வளாகத்திற்கு, ஒரு மாத விடுதலையும் முடிந்து செல்ல இருக்கின்றான். ரேக்காவும் கா.பொ.த.உயர்தரப் பரீட்சையை எதிர்நோக்கிக்கொண்டிருந்தாள். பயணம் செல்லுமுன் இறுதியாக அவளிடம் விடைபெறுவதற்காக வீட்டின்முன்புற வீதியால் செல்லும் போது ரேக்காவின் மாமன் ஓடி வந்து அடிக்க முற்படுகின்றார். அதனை எதிர்பார்த்தவள்போல் ரேக்கா ஓடிவந்து அந்த அடியை தான் ஏற்றுக்கொள்கிறாள். இதற்கிடையில் ரகுவின் நண்பர்கள் சிலர் மாமனை நையப் புடைக்கின்றனர். "ரகு உங்களைக் காப்பாத்துறதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததே பெரிய பாக்கியம்." ரகுவிற்கோ எல்லாம் கனவுபோல் தோன்றி என்ன பேசுவது என்று தெரியாமல் ரேக்காவை அணைத்த வண்ணம் கண்களில் நீர்மல்க நிற்கிறான். அவளோ அவனணைப்பில் வலியை மறந்து விசும்புகிறாள். மாமன் அவளை இழுத்துக்கொண்டு செல்கிறார்.

ரகு, ரேக்காவின் காதல் ஓடம் வாழ்க்கை எனும் கரையை நோக்கி நகரத்தொடங்கி ஏழு வருடங்கள் ஓடிவிட்டன. இன்னமும் ஒருவரை ஒருவர் கொட்டு அறியமாட்டார்கள். இன்று இறைவனாக ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கான்போலும்.

(இறைவா உனக்கு நன்றி)

ரகுவிற்கும் கன்னத்தில் சிறுகாயம்போலும் ஒரு இடத்தில் எரிந்துகொண்டிருந்தது. அதை அவன் பொருட்படுத்தவில்லை. என் ரேக்காவிற்கு அடித்துவிட்டானே பாவி என்று பொருமினான். தூயகாதலுக்கு இவையெல்லாம் சகஜமோ? அது அவர்களுக்கே வெளிச்சம்.

அடுத்த இதழில் தொடரும்

**இரா மோகன்**


**INSTITUTE FOR INTERNATIONAL TAMIL RENAISSANCE**

*BOOKS ON:*

**TAMIL CULTURE, AND SAIVITE HINDUISM**

**By K. Gnanasoorian**
**M.Sc., C.Chem., M.B.I.M., D.M.S.**

(Revised Prices: as from 1.1.88)

*Books in English:*

1. **Introduction to Tamil Culture**
   *Second Edition. January 1984 (Price:£10)*
2. **A Date with Destiny**
   *on Saiva Siddhanta Philosphy. 1980 (Price:£10)*
3. **Introduction to Saivite Hinduism**
   *A Primer for Beginners. 1982 (Price:£5)*
4. **Meaning of Life**
   *in Saivite Hinduism. October 1985 (Price:£10).*
5. **Thiruk-Kural**
   *Selected Translations. 1976 (Price:£5)*
6. **What is Saiva Siddhanta?**
   *1986. (Price:£5)*
7. **Periya Purana Pushpaanjali**
   *1988. (Price:£10)*

*Books in Tamil:*

8. **Anchaa Nencham**
   *on Literature. 1980 (Price:10)*
9. **Thamilaa Viliththelu**
   *Essays. 1981 (Price:£10)*
10. **Viduthalaiyum Veetuperum**
    *on Thiruvacagam. 1984 (Price:£10)*

*For Postage and Packing please add 15% of COST*


**Allow Two Weeks for Delivery**

**I.I.T.R., 72 KING EDWARD ROAD, LONDON E17 (U.K.)**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Mr Kandaswamy

# TRIBUTE TO SOCIAL WORKER

Dear New Life,

This is Human Rights week and the 40th anniversary of the United Nations Universal Declaration of Human Rights. Human Rights Day December 10 falls heavily on the Tamil mind for the deaths, torture and disappearances of our fellowman and the heightened destruction of man and nature's travail.

Disappearances in the Tamil homelands are the work of government forces and more than 600 UN recorded cases are still unexplained by the Sinhala government. But what disturbs my mind is the disappearance of K Kanthasamy, a truely dedicated Tamil, who took upon himself to confront the difficulties facing the Tamils, almost singlehanded, since 1973.

He was a vulnerable friend to me, on whom I could depend during the process of building a formidable challenge in UK to the Sinhala institutional oppression in Sri Lanka.

From his Colombo base, he gave me valuable information no one can ever provide. Our loyalty to each other reflected in our commitment to the Ealam consciousness an identity of the Tamil people.

As his life was in danger from the security forces, he fled to London in 1983, which coincided with the Sinhala persecution of Tamils who lived amongst them during July/August of that year.

With instinctive skill, he organised the Tamil Information Centre to flash to the world, the day to day destruction to Tamil lives and property.

I was able to draw valuable information to convince the Home Office of the repression and the resultant fleeting of Tamils as if on a journey without a map. United Kingdom opened their doors for the refugees, when they knew the danger to their lives were genuine. K.K.'s part in this work of ours cannot be forgotten.

As a founder member of Standing Committee of Tamils (SCOT) and as the founder of Central British Fund for Tamil Refugees Rehabilitation, I can say with confidence, that once you entrust something to K.K. you can be certain that he will bring all the expertise at his command and reliable friends to make it a success. SCOT let us down by its own acquiscence to mediocracy. The fire of the spirit of the struggle became dormant, and K.K. from rehabilitation centres in Tamil homelands under the auspices of the Tamil Refugee Rehabilitation Organisation, having been denied of its charitable status by the racist Jayawardhene regime, did not get the full support as I wanted SCOT to give wholeheartedly. The letter written to me on 16 April 1978 by K.K. that a new charitable organisation should be formed showed his independence and commitment to succeed where others failed.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

That is how CBFTR was formed and given over to K.K. when he fled to London as an exile. The letter clearly identifies his love for the oppressed, and his humane understanding of the dependence of the people on honest men like K.K. Devoid of any political ambition, he served the people, at a time when there was no one to give a leading hand for others to join in.

But it was strange that he suddenly closed the Tamil Information Centre, a vital link with the outside world, and recognised by such organisations as Amnesty International for its authentic reporting, and decided to leave for the Tamil homelands.

By doing so, he threw caution aside.

He did not realise that there are no more institutional bases in Tamil Ealam for him to base his activities. There is also no more reason and fairplay. It is a land of violence and only the gun speaks and all have to know that. K.K. has no enemies, but he could understand the politics of violence now supreme in these lands.

He went to make peace with his motherland, but was swallowed up by the insatiable appetite of violence. No one can say that he disappeared from the hands of the death squads of the oppressor - the government. They are not there. Those who took up arms to resist the enemy to protect the people are turning the guns on the people. This is tearing our hearts apart. K.K. did not accept for himself the violence that turns on itself for sustenance, a suicidal madness.

It is this danger that appears real as seen in the Sinhala SOUTH. K.K. is a true martyr and he not only had the feeling in his guts, in his blood, but in his activities, in his attitude to the definition of the Ealam Tamils, that was once Tamil culture - a series of challenges and the way we confront our difficulties - Not to destroy human life.

I salute him for his bravery and courage. Everything else stands second around me.

Yours sincerely
S. Maharasingam

(Courtesy New Life)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சவுத்தோல் கோல்ட்ஸ் பரிசளிப்பு விழா



SOUTHALL COLTS CRICKET TEAM 1988

இக்கழகத்தின் வருடாந்த சிறந்த வீரர்களுக்கான பரிசளிப்பு விழா முதன்முறையாக வெகு சிறப்பாக அண்மையில் கொண்டாடப்பட்டது. சவுத்தோல் டொமினியன் மண்டபத்தில் செல்வேல்( )தேவதாசன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக பிரபல வாக்கு நிபுணர் திரு. சிறிகரனும், அவரது பாரியாரும் கலந்து கொண்டனர். சவுத்தோலில் முதன் முறையாக இளைஞர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் வியக்க வைத்தது. குறிப்பாக இளைஞர்களால் நடாத்தப்பட்டதால் இளைஞர் சமூகம், அத்துடன் சவுத்தோல் தவிர்ந்த வேறு பல இடங்களிலுமிருந்து வருகை தந்திருந்தது விழாவை மேலும் சிறப்பித்தது. இக்கட்டத்தில் இக்கழகத்தின் கடந்த கால வளர்ச்சியை சற்று பின் நோக்குவது சாலச்சிறந்ததாக இருக்குமென நம்புகின்றேன். இக்கழகம் 1986ம் ஆண்டு ஜூலை மாதம் திரு. பாபு, சண்முகநாதன் ஆகியோரின் விடாமுயற்சியினால் சிறு சிறு குழுக்களாக அமைந்திருந்த விளையாட்டு வீரர்களை ஒன்றுபடுத்தி " " என்ற பெயரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கழகம் உருவாக்கப்பட்ட ஓரிரு வாரங்களிலேயே சவுத்தோல் இளைஞர் குழுவொன்றுடனை முதலாவது கிரிக்கட் போட்டி சவுத்தோலில் நடைபெற்றது. ஆனால் இப்போட்டியில் இவர்கள் தோல்வியைத் தழுவிக்கொண்டனர். இதன்பின்னர் போட்டியாளர்களின் விடாமுயற்சியும், கடின உழைப்பும் இவர்களைக் கைவிடவில்லை. அதே சவுத்தோல் இளைஞர்குழுவுடன் திரும்பவும் போட்டியிட்டு வெற்றியைத் தமதாக்கினர். இதுவே இவர்கள் கழக வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாக அமைந்ததென்றால் அது மிகையாகாது. அடுத்த வருடமே இக்கழகத்தின் பெயர் " "எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை சுமார் 35 இற்கும் மேற்பட்ட போட்டிகளில் கலந்து கொண்டுள்ளனர். இதில் குறிப்பிடத்தக்கது சவுத்தோல் கிரிக்கட் கழகம், கிரிக்கட் கழகம், ஆகியவற்றுடனை வெற்றி வாகையே.

ஆனால் இவர்கள் மனதில் ஒரு சிறு கவலை "மார்க் கோஸ்" என்னும் பிரபல்யம் பெற்ற கழகத்துடனை போட்டியில் ஒரு சில ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியேற்பட்டதே. ஆனால் இவ்விளைஞர்களின் விடாமுயற்சியும் கடின உழைப்பும் நிச்சயம் இவர்கள் மீண்டும் அக்கழகத்துடன் விளையாடி வெற்றியைத் தழுவுவார்கள் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை. இவர்கள் சமீபத்தில் கால்ப்பந்தாட்டக் குழுவொன்றையும் ஆரம்பித்துள்ளனர். இக்குழுவும் இப்போ துரித வளர்ச்சியடைந்து வருகின்ற தென்பது குறிப்பிடத்தக்கது. மீண்டும் உங்களை விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்கின்றேன். விழா திரு. செல்வேல் அவர்களின் தலைமையுரையுடன் ஆரம்பிக்கப்பட்டது. விழா தமிழிலேயே நடத்தப்படும் எனும் திரு. செல்வேலின் அறிவிப்பு மண்டபத்தில் பெரிய கரகோஷத்தை ஏற்படுத்தியது. இலண்டனில் எம்மக்களின் தமிழ் பற்று இன்னமும் சற்றும் குறையவில்லை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அதனைத் தொடர்ந்து திரு. தேவதாஸன் அவர்கள் கழகத்தின் வளர்ச்சிபற்றி சிறப்புரை வழங்கினார். அதனையடுத்து பிரதம விருந்தினர் திரு. சிறிகரன் அவர்கள் உரையாற்ற அழைக்கப்பட்டார். ஒரு ஆங்கில உரையை எதிர்பார்த்த எனக்கு அவர் என்ற தமிழ்க்குரல் என்னைத் திகைக்க வைத்தது. தான் இலங்கையில் ஒரு மேடைப்பேச்சாளர் என்பதை நிரூபித்தது அவரது தமிழ்ப்பேச்சு. அத்துடன் எம்மக்களின் அகதி நிலையை தனது பேச்சின் நடுவில் இணைந்து கொண்டது பாராட்டப்பட வேண்டியது. இதன்பின்னர் பரிசளிப்பு விழா இடம்பெற்றது. இதில் முதலில் சிறந்த வீரர்களுக்கான பரிசுக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

சி.ரகுராம்

19ம் பக்கம் தொடரும்

ஒருவர்: மைச்சான், அங்கையொரு கசெற்றிலை வேலையிருக்காம். செய்யப்போறியே? நான்உடனை ஒழுங்கு பண்ணி விடுகிறேன்.

மற்றவர்: என்ன நம்பர் குடுத்தோ, அல்லாட்டி கையிலை காசோ?

ஒருவர்: என்னய்யா, நடிகை பட்டப்பகலில் வீட்டிலை அதுவும் அவவின்ர காவல் நாய்க்கு முன்னாலை கற்பழிக்கப்பட்டிருக்கிறா. நாய் ஒன்றுமே பண்ணவில்லையோ?

மற்றவர்: அது பாருங்கோ, நாயைச் சொல்லிக் குற்றமில்லை. தினமும் நடிகை வீட்டிலை இப்படி நடக்கிறதால, நாய், இதுவும் அப்படித்தானாக்குமெண்டு எண்டு நினைச்சுப் போட்டுது.

www.tamilarangam.net

# மீரா எங்கே போகிறாள்

கீர்த்தி

சென்ற இதழ் தொடர்ச்சி



எல்லா இடமும் தேடிவிட்டான். ஆம் அவள் வரவில்லை. கிறிஸ்ரீனாவைத் தேடி அலுத்துப்போன மேனனின் கண்களும், மனமும் கேள்விக் குறிகளைத் தொடுத்தனவே தவிர பரீட்சைக்கு விடைகளைப் பகரவில்லை. பரீட்சை முடிந்ததும் முடியாததுமாக அவனது அவசரப்படும் மனதினை ஆசுவாசப்படுத்திக்கொண்டு அருகே இருந்த PHONE BOOTH க்கு விரைந்தான். ஆனால் அது ஒரு வீராதி வீரனால் கொலைசெய்யப் பட்டுக்கிடந்தது. அகன்பச்சை, சிவப்பு நிற வயர்கள் நரம்புகளாகத் தொங்கின. சற்றுத்தொலைவில் இருந்த இன்னுமொரு PHONE BOOTH க்கு விரைந்தான். அவளது தொலைபேசி எண்ணை சுழற்றியவன் மறுமுனையில் அழைப்போசைக்காகக் காத்திருந்தான்.

மறுமுனையில் அழைப்போசை கேட்டது. "HELLO" ஒரு ஆணின் குரல் அங்கு. "HELLO CAN I SPEAK TO CHRISTINA"..... என்று முடிக்குமுன் "SORRY SHE IS NOT IN AT THE MOMENT I AM HER HUSBAND SPEAKING MAY I HELP YOU" ? மறுமுனை ஒலித்தது. மேனன் அதிர்ந்தான். அவன் இதயம் கூட நின்றுவிட்டதோ என்ற ஓர் உணர்ச்சி. ஓ! அவள் திருமணமானவளா? கூறவே இல்லையே! இருக்காது, இருக்கவே இருக்காது. என் கிறிஸ்ரீனா அப்படி.......... ஒரு வேளை ரோங் நம்பரோ? மீண்டும் டயல் செய்து பார்க்கின்றான். "HELLO ROBERT HERE" அதே குரல் "HELLO" ...."HELLO"

மேனன் எதுவுமே பேசாது போனைக் கீழே கை நழுவ விட்டான். ரொபேட் என்பவனை அமெரிக்காவில் இருக்கும் அவளின் முறையான ஒரு உறவினன் என்றாளே? கிறிஸ்ரீனா நீயா என்னை ஏமாற்றிவிட்டாய்? இருக்காது, என் கிறிஸ்ரீனா என்னை ஏமாற்ற மாட்டாள். வீட்டிற்கு வந்து படுக்கையில் புரண்டு அழ வேண்டும் போலிருந்தது. வீட்டுக்கு வந்து வாசல் கதவைத் திறந்ததும் ஒரு கட்டுக் கடிதம் அவன் வரவைப் பார்த்திருந்தது. கண்களைக் கூர்ந்து பார்த்தால் ஒன்றில் கிறிஸ்ரீனாவின் எழுத்துக்கள்.

ஆம் அவள் போனவாரம் ROBERT என்பவனைத் திருமணம் செய்ததையும் இப்போது அவள் அமெரிக்காவில் பிரபலமடைந்த தொழிலதிபராக இருப்பதையும் இந்தவார இறுதிக்குள் இருவரும் அமெரிக்கா செல்ல இருப்பதாயும் எழுதியிருந்தாள். என்னை ஏமாற்றிவிட்டாள் சண்டாளி பாதகி இப்படி எத்தனை வசைமொழிகள் அவன் வாயிலிருந்து வந்தன, திருப்புமுனையும் ஒருதிருப்தியும் மழை விட்டு ஓய்ந்தது போன்ற ஒரு உணர்வு மேனனுக்கு ஏற்பட மெதுவாக நிமிர்ந்து பார்த்தான். அவன் மதிக்காத போதும் அவனை மதித்து அவனுக்காக உயிர்வாழும் மீரா......, மீராவின் அறைக்கதவுகள் திறந்து கிடப்பது அவனை வா வா என்று அழைப்பதுபோல் இருந்தது.

மீரா!, ...

அன்பும் ஆதரவும் கலந்த குரலில் முதல்முறையாக அழைத்தான் மேனன். அதை ஏற்றதாக எந்த அறிகுறியுமில்லை. மீண்டும் மீரா என அழைத்தான். அதன் எதிரொலி மட்டும் கேட்டது. அறைக்கதவை மெல்லிதாக விலக்கிப் பார்த்தான். என்ன ஆச்சரியம் அறை வெளித்துப்போய்க் கிடந்தது. மேசை மீது ஒரு கடிதம்,

அன்புள்ள அத்தான்!,

என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் உள்ளத்தை அறியாது உங்களுக்குப் பல வகையிலும் சிரமம் தந்து விட்டேன். போன வாரம் உங்கள் அறையைத் துப்பரவு செய்யும் போது உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்தப் பாக்கியசாலி யாரென அறிந்துகொண்டேன். அந்தப் பாக்கியசாலிக்குப் போட்டியாக இந்தப்பாவி இருப்பது நியாயமும் அல்ல தர்மமும் அல்ல. என்ன ஒன்று உங்கள் அம்மா அப்பாவிற்கு என்னை மருமகளாக்கும் பாக்கியம் இல்லை என்பதுதான் ஆனால் நான்...நான் மகளாகும் பாக்கியம் கிட்டுமல்லவா. ஆம் நான் தான் அவர்களைப் பராமரிக்கப்போகிறேன். ஏனென்றால் இனியும் உங்களால் அங்கு வந்து அவர்களைப் பராமரிக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமோ? என்னவோ? எப்படியோ உங்கள் வாழ்க்கை நலம் பெற என் ஆசிமலர்களை என்றென்றும் தூவுவேன். என்னை மன்னித்து விடைதர மீண்டும் உங்களை வேண்டுகின்றேன்.

என்றும் உங்களுக்கு அன்பையும்
பாசத்தையும் பரிசாய்த்தரும்

மீரா

கடிகாரம் 12 தடவைகள் ஒலித்தது அமைதியான அந்த மீராவைத்தாங்கிய விமானம் கொழும்புநோக்கி வானத்தில் எழுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பைய வரும் தைமகளே

பைய நடந்து வரும் தைமகளே!
கையிலென்ன ?
மெய்யா? வெல்லத்துப் பையா?
கையிலே ! உனக்கென்ன ?
தவறாமல் ஆண்டு தொறும்...
பைய நடந்து வருகின்றாய்!
வந்தா திங்கள் ஒன்று தங்கி
மெல்ல மறைந்து விடுகின்றாய்! —தமிழ் பேசும்
வையம்....உனது வரவினிலே...
மையல் கொண்டு மகிழ்வெய்தத்
தையாள் பிறந்து விட்டாள்...
உய்ய வழி பிறக்குமினி!
செய் தொழிலில் வெற்றி வரும்...
செல்வம் கொழிக்கும்
தையலர்க்குத் திருமணத்தால்...
நல்ல வழி பிறக்கும்!
என்ற படி கதிரோன்...
திசை நோக்கி நின்று..
நெய்யைப் பாலைப்...
பழத்தைப் படையல் செய்து
கையிரண்டை உயர்த்தி
மெய்யால் வணக்கங்கள்

செய்து நிற்கும். 
உழைப்பவனும்... அவனை
உழக்கி வளர்பவனும்..
அழைத்து மகிழ்கின்றான் உன்னை!

பலநாட்கள்...பட்டினியில்
பசியிற் கிடந்த
இயலாத இதயங்கள் கூடப்
பல பாடு பட்டு...
உலைக்கரிசி தேடித்...
தலைவாசல் மெழுகி
முற்றத்தில் அழகாக...
உலைப்பானை வைத்து..
ஒரு பொங்கல் செய்திடுவார்!

கிழக்குதிக்கும் கதிரவனின்
தினத்தோற்றம் கண்டாலும்
வழக்கத்தை மீறியதோர்
வனப்பிருக்கும் பொங்கலன்று..

இளந் தைப் பனிமுட்டம்
இலைதளிர்கள் தமைமுடிப்..
படர்ந்திருக்கும் பனித்துளிகள்!
கிணற்றடியில் கலகலப்பு
சிரித்தல்! சிணுங்கல்!
யார் முதலில் குளிப்பதெனும்
பாசப்பிணக்கு
'சுணங்காமல் குளித்து விட்டு..
வாருங்கள்' என்று
அழைக்கும் அம்மாவின்
அன்பொழுகும் ஆணை !
உலர்த்தியும் உலர்த்தாமல்
தொங்கிய முடிந்த கொண்டை !
மலர்ச்சி நிறைந்த முகம்
நெற்றியின் மத்தியிலே..
விளங்கிடும் திருநீறு!
அம்மாவை நினைத்தால்
அழுவேன் நான் எப்போதும்!


தலைவாழை யிலை ..வெட்டி
வர ஒருவர்!
கோலமிடும் அக்கா
பால் பிழியும் தங்கை !
வாண வெடி..வேடிக்கை...
செய்கின்ற தம்பியர்!
ஒருமுறையா பொங்கலுண்டோம்.?
ஒன்பது முறையன்றோ...
சுவைப்போம் நாம்!

அயல் வீடு..
உறவினர்கள் !
அவர் வீட்டுப்...
பொங்கலெல்லாம்...
நிரையாக ..
வந்திருக்கும்.!
நிறையாது வயிறு !
வகை வகையாய்ச்
சுவையிருக்கும்!
நின்ற படி...
இருந்த படி..
நடந்தபடி..யென்று..

கண்டபடி யெல்லாம்.
நாமுண்போம் !
வடையென்ன..வாழைப்
பழமென்ன..இவையெல்லாம்
முறையாக..வயிற்றுக்குள்
நடைபோடும்!
'நம்பிக்கை ஒளி' நெஞ்சைச்
சந்திக்கும் நாள் பொங்கல்.
நாளென்றார் முன்னோர்!

துன்பமெனும் காட்டின் வழிநடந்து
மலையேறி. உச்சியிலே நிற்கின்ற
உணர்வெய்தும் நாளிதுவாம்!
எங்கும் பரந்த வெளி!
எதிலுமோர் புதியசுகம்!
கண்களில் தெரிவதெல்லாம்
பசுமையன்றி வேறில்லை.
காதலர்கள் களிப்பர்!
களித்தவர்கள் மென்மேலும்
களிப்படையத் துடிப்பர்!
மேதையர்கள் அறிவொளிக்கு
மெருகூட்ட நினைப்பர்
வேதனைகளோடும்
விரக்தி மறைந்து விடும்
சோதனைகள் கண்டும்
சளைக்காமல் போராடும்
சுறுசுறுப்புத் தோன்றும் !

தைமகளே இதுதான்
நாமன்று கண்ட பொங்கல்!
பொன் மலர்கள் தூவிப்
புதுக் கோலமிட்டுனை
கண்ணிறையப் பார்த்த..அந்தக்
காலம்..என்றோ ..போனதடி !
செல்விருந்து ஓம்பி வருவிருந்து காத்திருந்த
இல்லங்கள் இன்றில்லை !
கோலமிட்ட அக்காக்கள் கொடியவர்கள் கைபட்டு
வாழ்வே வெறுத்துக் கோடிக்குள் முடங்கிவிட்டார்





— மறு இதழில் தொடரும் —
பங்கயமணாளன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
www.tamilarangam.net

www.tamilarangam.net

# புறப்பட்டு வா மகனே

## ஈழத்திலிருந்து ஒரு தாயின் கடிதம்

என் அன்பு மகனுக்கு,

ஈழத்தின் கண்ணே அமைந்த எம்மூரில், அண்மையில் ஏற்பட்ட விபரீதம் பற்றி நீ அறிந்திருப்பாய். அந்நிய நாட்டுப் பாதகர்களின் பலிக்கு இரையானோர் கணக்கில் லையடா.

என் அன்பு மகனே! நான் உன்மீது வைத்திருக்கும் பாசத்தை நீ நன்கு அறிவாய். நீ வெளிநாட்டில் வெளிநாட்டில் இருக்கும் போது அந்நியர்களின் கெடுபிடிகளின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தாலும் கூடப் பாதுகாப்பாக இருப்பாயென நான் அறிவேனடா. இருப்பினும் உன்னை நான் இங்கு அழைக்கின்றேன். ஏன் தெரியுமா? என் இறுதிக் காலத்தில் உன்னைப் பார்த்து விட்டு மரணிப்பதற்காக அல்ல.

எங்கிருந்தோ வந்தவர்கள் புரிந்த கொடுமைகள் சொல்லில் அடங்கா. இந்தப் பேடிகள் பாலகர்கள் மீது கனரக வாகனங்களை ஏற்றினார்கள். கதறக் கதறப் பெண்களை மானபங்கப்படுத்தினார்கள். வாலிபர்கள். வயோதிபர்கள் அனைவரையும் ஓடினால் போக விட்டு பின்புறமாகச் சுட்டுக் கொன்றார்கள்.

மகனே ! நீ குடும்பத்தின் பொருளாதாரத்தைச் சீராக்கப் பாடுபடுகின்றாய். ஆனால் நீ நாடு திரும்பும் போது வாழ்க்கையிலே சீரழிக்கப் பட்டுப் பிச்சைக்குவியலாக்கப்பட்ட தமிழ்ச் சமுதாயத்தையே காணப் போகின்றாய். என் அன்பு மகனே ! ஒவ்வொரு கணமும் காலதேவன் எந்த உருவில் வருவானோ எனப்பயந்து ஏங்கும் தமிழர் நிலையை எண்ணிப் பார்க்க மாட்டாயா?

மாறுபட்ட சூழல், புதிய வேற்று மனிதர்களின் சகவாசம், வேலை செய்தால் கூலி, பணத்தின் மீது கொண்டுள்ள மோகம் என்பன எத்தனையோ தமிழ் இளைஞர்களின் மாறுபட்ட காரணமாகியுள்ளது என்பதனையும், சில சமயங்களில் தமிழ்ப் பாடல்களைக் கேட்பதையோ அல்லது தனியே தமிழர்களைக் காணும் போது கூடத் தமிழில் கதைப்பதையே வெட்கமாக நினைப்பதாகவும் இங்கு அறிகிறேனடா. அப்படிப்பட்ட தமிழ் இளைஞர்களையிட்டு வெட்கப்படுவதை தவிர வேறு என்ன செய்ய முடியும்.

இங்கு ரொக்கட் லோஞ்சரின் சத்தமும் துப்பாக்கி வேட்டுக்களும், ஷெல் ஒலியால் ஏற்படுகின்ற மரண ஓலங்களும் எமது அன்றாட வாழ்க்கையின் அத்தியாயங்கள். இன்று ஆண், பெண், சிறுவர், சிறுமியர் அத்தனை பேருமே போர்க்களத்தில் தான் நிற்கிறோமடா. மக்கள் போராட்டம் எந்தவொரு நாட்டிலும் தோல்வியடைந்தது கிடையாதடா. ஆனால் இந்தப் போராட்டம் எத்தனை வருடம் நீடிக்கும் என்பதுதான் புரியாத புதிர்.

இன்று களம் செல்பவர்கள் மீள்வார் என்பது சந்தேகமாக இருந்தும் களம் செல்லத் துடிப்பவர் எத்தனையோ பேர். அத்தகைய பொதுஜனப் போராட்டத்தில் நானும் தவறாது கலந்து கொள்கிறேன்.

களம் செல்லும் நான் மீளாத்துயில் கொள்ளலாம். ஆனால் பொதுஜனப் போராட்டம் துயில் கொண்டு விடக் கூடாது. அதற்காகத் தான் மகனே உன்னை நான் அழைக்கிறேன். எனது மரணத்தின் பின்பு என் பங்களிப்பினை நீயாவது நிறைவேற்று. ஆகவே என் அன்பு மகனே! புறப்பட்டு வா, உன் தாயின் இறுதிக்கிரியைகளுக்காக அல்ல . தமிழ்த்தாயின் விடிவிற்காக.

இப்படிக்கு
உன் அன்புத் தாய்

புங். பிறேம்

## சவத்தோல் கோல்ட்ஸ்

16ம் பக்கத் தொடர்ச்சி

சிறந்த பந்து வீச்சாளர் – எம். கெங்கதேவன்.

சிறந்த தடுப்பாட்ட வீரர்கள் – எம். குமரதேவன்
ரி. மூர்த்தி

சிறந்த ஆட்டக்காரர்கள் – எஸ். ரி. ராஜ்

88ம் ஆண்டு சிறந்த வீரர் – எம். சிறிரங்கன்.

அத்துடன் குழுவிலுள்ள அனைத்து போட்டியாளர்களுக்கும் பரிசுக்கிண்ணங்களை திருமதி. சிறிகரன் அவர்கள் வழங்கினார்கள். திரு. செவ்வேல் அவர்களின் நன்றியுரையுடன் அனைவருக்கும் இராப் போசனம் அளிக்கப்பட்டது. ஒரு சிறு விழாவாக இருந்தாலும் மிகவும் சிறப்பாக நடந்ததையிட்டு மிகவும் பெருமிதம் அடைய வேண்டும். அவர்கள் வருங்காலத்தில் மேலும் பல வெற்றிகளை அடைய அலைஓசை பத்திரிகையின் சார்பில் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மங்கையர் மஞ்சரி

## தேங்காய்ப்பால் அல்வா

தேவையான பொருட்கள் :-

தேங்காய் 1
சீனி ½ மூடல்
கோதுமைமா ½ சுண்டு (பச்சை மா)
ஏலக்காய்/கராம்பு தேவையான அளவு

செய்முறை :- தேங்காய்ப்பூவுக்குச் சிறிதளவு தண்ணீர் விட்டுத் தடித்த பாலாகப் பிழிந்து கொள்ள வேண்டும். அப்பாலினுள் சீனியைப் போட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். தேங்காய்ப்பால் எண்ணெய் போல் வரத் தொடங்கியதும் அதனுள் கொஞ்சங் கொஞ்சமாகக் கோதுமைமாவைப் போட்டுக் கிளற அத்துடன் ஏலக்காய், கராம்பையும் போட வேண்டும். பின்பு தடித்த பதமாக வந்ததும் எண்ணெய் பூசிய தட்டில் போட்டுச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளலாம்.

— திருமதி. சுகுமார் —
வெம்பிளி

## லட்டு

தேவையான பொருட்கள் :-

2 இறா ரவை
1 இறு கஜு
¼ இறு பிளம்ஸ்
1 தேக்கரண்டி ஏலரிசிப் பவுடர்
1 ரின்பால்
நெய்

செய்முறை :- முதலில் கஜுவையும் பிளம்ஸையும் சிறிதளவு நெய்யில் வறுத்து ஒரு பக்கத்தில் வைக்கவும். பின்பு தாச்சியில் 5 தேக்கரண்டி நெய்யை விட்டு அதனுள் ரவையைக் கொட்டி ரவையை நன்கு வாடா கும்வரை வறுக்கவும். அதன் பின்பு அடுப்பில் இருந்து இறக்கி முதலில் கஜு, பிளம்ஸ், ஏலக்காய்ப்பவுடர் ஆகியவற்றைக் கொட்டிக்கிளறவும். (இனிப்புக் கூடத் தேவைப்பட்டால் ¼ இறா சீனியையும் போட்டுக் கிளறவும்) பின்பு இந்தக் கலவைக்குள் ரின் பாலை ஊற்றி உருண்டைகளாகப் பிடிக்கவும். தண்ணீரில் இடைக்கிடை கையை நனைத்துப் பிடித்தால் உருண்டைகள் நன்றாக அழகாக வரும். கலவை, உருண்டையாகப் பிடிக்கும் போது உலர்ந்தால் அக்கலவையை மீண்டும் அடுப்பில் சிறிது நேரம் சூடாக்கிய பின் உருண்டையாகப் பிடிக்கவும். ஏறத்தாள 65-70 லட்டு வரை செய்யலாம்.

— திருமதி. சிவராசா —
வோலதாம்ஸ்ரோ.

# சமைப்போம் சுவைப்போம்

## ரவை உப்புமா

தேவையான பொருட்கள் :-

1 கப் ரவை
1 கப் தண்ணீர்
4 பொடியாக வெட்டிய பச்சை -மிளகாய்
½ கப் சிறிதாக வெட்டிய வெங்காயம்
1 கப் சிறிதாக வெட்டிய உ. கிழங்கு
½ தேக்கரண்டி கடுகு

4 மேசைக்கரண்டி எண்ணெய்
உப்பு, கறிவேப்பிலை.

செய்முறை :- ரவையைப் பொன்னிறமாக வறுத்து இறக்கி வைக்கவும்.
தாச்சியில் எண்ணெயை விட்டுக் கொதித்தவுடன் வெட்டிய வெங்காயம், கிழங்கு, மிளகாயைப் போட்டு வதங்க விட்டுப் பின் கடுகு கறிவேப்பிலையைப் போட்டுக் கிளறவும். பின்பு தண்ணீரை விட்டு உப்புச் சேர்த்துக் கொதிக்க விடவும். கொதித்ததும் ரவையை சிறிது சிறிதாகப் போட்டுக் கிளறி நன்கு வெந்ததும் இறக்கவும்.

— திருமதி. சாரதா —
வோல்தம்ஸ்ரோ

வீட்டுக்காரர்: என்ன தம்பி, இப்ப ஒழுங்கா ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோயிலுக்குப் போய் வாறீர். வீட்டிலையிருந்து ஏதாவது கடிதம் எழுதினவையோ கோவிலுக்குப் போகச்சொல்லி ?

குடியிருப்பவர்: இல்லையண்ணை, இந்தமுறை விசாவுக்குப் பிரச்சனை தருவாங்கள் போல கிடக்குது. அதுதான் முன்னெச்சரிக்கையா, ஒரு புத்தகப் பெட்டியைப் பார்ப்பம் என்டு தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்துச் செய்திகள்

திருகோணமலை நகராட்சி மண்டபத்தில் 09.11.88 அன்று 10 மணிக்கு வட-கிழக்கு மாகாணசபை அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் சத்தியப்பிரமாணம் ஆளுனர் முன்னிலையில் நடந்தேறியது. பின்னர் முதலமைச்சர் திரு.வரதராஜப்பெருமாள் அமைச்சர்களை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார். அமைச்சரவை விபரம் வருமாறு:-

வட-கிழக்கு மாகாணசபை

ஆளுனர்

லெப்டினன்ட் ஜெனரல் நளீன் செனவிரத்தின

பேரவை

தவிசாளர்:- திரு.பொன்.ராம்.ராஜகாரியர்

பிரதிதவிசாளர்:- திரு.வி.கணேசமூர்த்தி

அமைச்சரவை

முதலமைச்சர்:- திரு.அ.வரதராசப்பெருமாள்

நிதியமைச்சர்:- திரு.பெ.கிருபாகரன்

காணி விவசாய
-மறுவாழ்வு அமைச்சர்:- திரு.சி.எம்.கணேசலிங்கம்

தொழில்துறை, போக்குவரத்து
-சாலை அபிவிருத்தி அமைச்சர்:- திரு.எம்.அபியூசுப்

மனித வள அபிவிருத்தி அமைச்சர்:- திரு.எ-எ-டயன்.ஜயதிலகா.

அமைச்சுக்களும் அவைகளின் பொறுப்புக்களும்

முதலமைச்சு :- சட்டமும் ஒழுங்கும், மொழியும் பண்பாடும், உள்ளூராட்சி, கிராமிய அபிவிருத்தி. கூட்டுறவு, வீடமைப்பு நிர்மாணமும் கல்வியும் கல்விச் சேவையும், சுகாதாரமும் சுதேச வைத்தியமும்.

நிதியமைச்சு :- நிதி, வர்த்தகம், உணவு விநியோகம், மீன்பிடித்துறை, சமூக சேவைகள்.

காணி விவசாய-
மறு வாழ்வு அமைச்சு :- காணி, காணி அபிவிருத்தி, விவசாயமும் கமநல சேவைகளும், மறுவாழ்வு.

மனிதவள அபிவிருத்தி-
அமைச்சு :- திட்டவாக்கம், மனிதவள அபிவிருத்தி, இளைஞர் விவகாரம்.

தொழிலாக்கம், போக்குவரத்து-
சாலை அபிவிருத்தி அமைச்சு :- கைத்தொழில், சக்தி, சாலை, போக்குவரத்து.

தகவல்:- மைக்கல் கொலின் .
-எமது திருகோணமலை நிருபர்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# HUMAN RIGHTS DAY APPEAL BY MR MAHARASINGHAM

The Rt. Hon. Sir Geofrey Howe QC, MP,
Secretary of State for Foreign Affairs
and Commonweal Affairs
Downing Street
London, SW1

Dear Sir Geofrey Howe,

"First they came for the Jews
and I did not speak out-
because I was not a Jew.

Then they came for the communists
and I did not speak out-
because I was not a communist.

Then they came for the trade
unionists and I did not speak out-
because I was not a tradeunionist.

Then they came for me-
and there was no one left
to speak for me."

Pastor Niemoellor(victim of the Nazis)

Tomorrow is Human Rights Day.

Gross violation of human rights have intensified in the whole of Sri Lanka. Under emergency powers the government has set up death squads that are empowered to kill and dispose of the bodies without inquest. "The more dangerous human rights aspect of it is that people (in Sinhala south) are being rounded up at night and killed, and of their bodies disposed of." said the president of the Colombo District Citizens' committee, Mr Prins Gunasekera, a senior lawyer (The Guardian-November 29th) (1a).

The Sinhala Sri Lanka is sliding into chaos, anarchy and civil war and eventual collapse of democracy. The long awaited presidential election is now scheduled to take place on the 19th of December, in a land where fear reigns supreme ; and as Bruce Palling reports in the Independent of 17 December, "The Prime Minister is relying for his protection on the Special Task Force, the paramilitary group trained by former British officers which is blamed for the counter terror." (2a) We have brought to your attention in our previous Human Rights Day appeals of the mass murders perpetrated on the Tamils civilian population by these death squads.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Jon Swain writing for the Sunday Times of 27 November(3a), observes, " Since the strikes the army, which has formed its own death squads, has been keeping essential services going...But only a rash person here and increasingly in Colombo dares take a decision without the Janatha Vimukthi Perumuna (JVP)- a violent Marxist revolutionery group- ...One of the climate of fear is that the British and other Western embassies have been inundated with visa applications from wealthy Sinhalese seeking to leave the country. Another is the flight of thousands of western tourists."

The Secretary General of the Tami United Liberation Front Mr A Amirthalingam, who was in London recently, has addressed a letter to the Home Secretary(4a), which explains the danger to those Sri Lankans, who are asylum seekers in the UK. who are threatened with deportation and who have already been forcibly deported. He is concerned for the safety of Viraj Mendis, a Sinhalese, who is in sanctuary in the church of Ascencion in Manchester, from death squads with 'shoot to kill' powers. Dr Neelan Thiruchelvam, a Tamil intellectual and a former member of parliament, in his letter(5a) has stressed in his concluding paragraph that, "in the circumstances, it would be inhuman to compulsorily repatriate Sri Lankan Tamils to any part of Sri Lanka and expose them to such arbitrary treatment."

Fear is part of pain. It impoverishes the mind of the people, in particular the refugees. In England, a ghettoisation of the mind is taking place, which alone can destroy mankind. There is no human rights any more in England for the oppressed to take cognizance of. Then, why should Viraj Mendis seek santuary and Tamis hide, when they are called upon by the Immagration service to see them? They are called to the airport terminals and some of them have been deported forcibly without their identity cards. and others are detained in detention centres, inspite of relatives appeal. This is devastating news for the rest; and however much we advsie them, they seek the annonimity of London to avoid getting deported and get killed in Sri Lanka. Home Office Minister ought to look into this with urgency and compassion in the light of the present deteriorating situation all over Sri Lanka.

I appeal on this auspicious moment of our fast vigil in the St Martin-in-the-fields of the awareness of the human rights, that all deportations to Sri Lanka be stopped and freedom of movement, thought and expression be restored to Viraj Mendis and the Tamils; and to censure the officials at the British Embassy in Colombo not to treat the Tamils with crude contempt who seek entry to the UK.

This is the eighth year of our fast, vigil and appeal on the Human Rights Day.

Yours sincerely

S. Maharasingam



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




158 *DEPORTATIONS TO SRI LANKA AND HUMAN RIGHTS DAY*

Dr Dafydd Elis Thomas
Mr Dafydd Wigley
Mr Ieuan Wyn Jones
Mr Frank Cook
Mr Harry Barnes
Mr John Cummings ★ 25

Mr Martyn Jones Mr John Battle Mr John Garrett
Mr Ken Livingstone

That this House expresses its concern at Her Majesty's Government's continued policy of returning and deporting Tamil refugees to Sri Lanka even though current reports indicate escalating and indiscriminate political violence in Sri Lanka; expresses its solidarity with Mr Maharasingam of the Tamil Action Committee, who is observing a fast and vigil on Human Rights Day at St. Martin in the Fields in sympathy with refugees; calls on Her Majesty's Government to impose a moratorium on deportations to Sri Lanka until greater calm is restored; and further calls on the Government not to deport Viraj Mendis, a courageous Sinhalese Sri Lankan who was brought up in the Christian faith, who is implacably opposed to violence, who has spoken out for civil rights in Sri Lanka and on behalf of the oppressed Tamil people, and who is likely to face torture and death should he be returned to that country.

★ *The figure following this symbol gives the total number of names of Members appended, including those names added in this edition of the Notices of Questions and Motions.*








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை
# அருள் இல்லார்க்கு எவ்வுலகமுமில்லை

மனித வாழ்விற்குப் பொருள் எவ்வளவு அவசியமோ அவ்விதமே அருளும் இன்றியமையாதது. பூத உடலின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பொருள் வேண்டும். உணவும், ஆடையும், வீடும் பொருட்களில் முக்கியமானவை. இன்னமும் எத்தனை எத்தனையோ பொருட்கள் வேண்டும் மனிதர் சௌகரியமாக வாழ்வதற்கு. இந்தச் சௌகரிய வாழ்வு சரீரம் இருக்கும் வரையில் தானே.

ஆன்மாவின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அருள் வேண்டும். உயிர் அல்லது ஆன்மாவைச் செம்மைப்படுத்தவும், உடலை விட்டுப் பிரிந்தபின் வேறு சடலத்தில் புகாமல் அது முத்தியடையவும் வாழ்க்கையில் பொருள் தேடுவதோடு அருளும் தேடிக்கொள்ள வேண்டும். இரை தேடுவதோடு இறையும் தேடிக்கொள். அது எப்படி எந்தச் சந்தையில் வாங்கலாமென்று தானே யோசிக்கிறீர்கள். வெளியில் போய் வெய்யிலில் குளிரில், மழையில் அலைய வேண்டாம். உங்கள் வீட்டிலே உங்கள் உள்ளம், அந்த உள்ளத்திலே இருக்கின்றது. ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் சற்று நேரம் தியானம்.

"சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறன் அரிது" என்கிறார் தாயுமானவர். பயிற்சி பண்ணினால் ஓரளவு முடியும். பல்லாயிரக்கணக்கான தெய்வப்பாடல்கள் மலை மலையாகக் குவிந்து கிடக்கின்றன தமிழிலக்கியத்திலே. உங்களுக்குப் பிடித்தமான சில பாடல்களைப் பொருள் விளங்கி மனம் ஒன்றிக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிச் சிறிது நேரம் வாய்விட்டுப் பாடுங்கள்.

"ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானை" "மெய்தான் அரும்பி விதிர் விதிர்க்கப் பாடினால் கண்ணீர் மல்கும். இதுவே அருள் வரவுக்கு அடையாளம். இப்படியாகத் தினந்தோறும் காலை மாலை ஐந்தைந்து நிமிடங்கள் பிரார்த்தனை செய்து கொண்டு வாருங்கள். பிரார்த்தனைக்குப் பின் ஒரு நிமிடம் கண்களை மூடிக்கொண்டு

"எங்கும் நிறைந்த பரம்பொருளே!
உன்னையன்றி ஓரணுவும் அசையாது

என் சிறுமையை நின் பெருங்கருணையினால்
பொறுப்பவனே
என் ஜென்மம் கடைத்தேற என்னை
ஆட்கொள்

என்று மனத்துள் அழுத்தமாக நினைத்து வேண்டிக் கொள்ளுங்கள்.

அன்றாட வாழ்வில் நல்லதை நினைப்பதும், செய்வதும் ஆண்டவனின் அருளைப் பெறுவதற்கு இன்று சிறந்த மார்க்கம்.

மற்ற சீவ ராசிகளிடை இல்லாதவண்ணம் மனித வாழ்க்கையில் பொருளும், அருளும் ஒன்றையொன்று பற்றிக் கொண்டே இயங்குகின்றது.

ஓர் சிற்றூரில் ஊர் நடுவே அமைந்த சந்தையில் பின்னங்கால்கள் சேர்த்துக் கட்டப்பட்ட பெரிய யானையொன்று நின்றது. அது மத யானை. பெரு மதங்கொண்டு எதிரே வருபவர்களை மிதித்துக் கொல்லும் வல்லம் முன்னங்கால்களை உயரத்தூக்கிச் சங்கிலிக்கட்டிலிருந்து விடுவித்துக் கொண்டு ஓடப்பெருமுயற்சி செய்தது. துதிக்கையை வான் நோக்கி நிமிர்த்தி வளைத்து எதிரியைத் தவிடு பொடியாக்கத் திமிறிக் கொண்டிருந்தது. சந்தைக்கூட்டம்

யானையைச் சுற்றிக் கூடியது. மாவுத்தன் மக்களிடையே கையேந்திக் காசு சேர்த்துக் கொண்டிருந்தான். அங்கு கூடிய கூட்டம் கலைந்தவண்ணமும் கூடியவண்ணமும் இருந்தது. சிலர் மட்டும் சற்று நேரம் நின்று அக்காட்சியைக் கண்டு களித்துக் கொண்டும், பயந்து கொண்டும் இருந்தார்கள். யானை அசையாமல் ஒரே நிலையில் நின்றதைக் கண்டுணர்ந்த ஒரு சிலர் அது நிஜ யானையா? அல்லது மரயானையா? என வியப்படைந்தார்கள். ஒருவர் "அது நிஜ யானையில்லை போய்த் தொட்டுப் பாருங்கள் என்று வீரப்பிரதாபத்துடன் சொன்னார். அயலார் பிள்ளையைக் கிணற்றில் தள்ளி ஆழம் பார்க்கிற சுபாவம். அவரே போய் யானையைத் தொட்டுப் பார்க்கலாமே. அவருக்கும் உள்ளூரச் சந்தேகம்தான். இப்படியாக அந்த மதயானையும் மரக்கட்டையும் மாறி மாறிக் காட்சியளித்தன. பார்ப்பவர்களுக்குத் தெளிவாகப் புலப்படவில்லை. யானையென்று நினைத்தால் மரக்கட்டை மறைந்து விடும், கட்டையென்று நினைத்தால் மதயானை மறைந்து விடும்.

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்துள் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதம்
(திருமந்திரம்)

கைதேர்ந்த சிற்பியால் செதுக்கப்பட்ட கருங்காலிமரயானை என்ற உண்மை வெளியாயிற்று.

இது போலவே பரம்பொருளும் நம் கண்களுக்குக் காணப்படும் பொருள்கள் சீவராசிகள் யாவும் ஒன்றையொன்று பின்னிக் கொண்டும் ஒன்றுள் மற்றொன்று மறைந்தும் இயங்குகின்றன. பரமாத்மாவும் சீவாத்மாவும் மின்சக்தியும் அதைப்பாய்ச்சுகின்ற கம்பிபோல ஒன்றி இயங்குகின்றன.

பொருள் வேட்கையும், அருள்வேட்கையும் ரயில்

போல ஒன்றையொன்று அணுகியே இயங்கவேண்டும். அறவழியில் பொருளீட்டித் தினசரி தியானம் செய்து அருளையும் ஈட்டுதல் வேண்டும்

இரை தேடுவதோடு இறையும் தேடு

மு அழகு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர்கள் எழுதுகிறார்கள்

* அன்பின் ஆசிரியருக்கு,

தங்கள் அட்டைப் படம் வெகு ஜோர். கிறீஸ்தவர்கள் சார்பில் எனது நன்றிகள் உரித்தாகுக.

– இம்மானுவேல் –
வோல்தம்ஸ்ரோ.

* ஆசிரியரே,

உங்கள் அலையோசையில் கவிதைகளுக்குப் பெரும் பஞ்சமாக இருக்கிறதே. லண்டனில் கவிஞர்களுக்கா பஞ்சம் ?

–பார்த்திபன் –
புறொம்பிளி

* அன்புள்ள ஆசிரியருக்கு,

சிகாக்கு மாகாணக் குடியேற்றங்களை நினைக்கும் போது காலப்போக்கில் தமிழீழம் யாழ்ப்பாணத்துடன் நின்றுவிடும் போலல்லவா இருக்கிறது.

– கேதீசன் –
மனைபார்க்

* அலை ஓசை ஆசிரியருக்கு,

கவிதையொன்றுக்கு ஈழத்தமிழர் ஒருவருக்குப் பரிசு வழங்கியிருந்தீர்கள். தொடர்ந்து இப்படிப் பரிசுப் போட்டி வைக்கலாமே?

– சத்யஜித் –
ஈஸ்ட் ஹாம்

* ஆசிரியருக்கு,

தங்கள் மலரில் நகைச்சுவைத் துணுக்குகள் இடம் பெறுவது குறைவு. இனிமேல் வரும் இதழ்களில் ஆவன செய்யுங்கள்.

–ராஜசுலோசனா –
குறேயிடன்.

* அலை ஓசை ஆசிரியருக்கு,

வணக்கங்கள். பரிசில் கூட எத்தனையோ கையெழுத்துப் பிரதிகள் வெளிவந்து நீர்க்குமிழியாக விட்டன. உங்களுடைய முயற்சி வரவேற்கத்தக்கது. தமிழ் நெஞ்சங்களில் கனல்கின்ற வெம்மையால் கடல் கொதித்து அலைகளை அள்ளி ஆகாயத்தில் வீசட்டும்.

– எஸ். கருணாநிதி –
பிரான்ஸ்

* பேரன்புடையீர்,

அலை ஓசை இலங்கையில் எமக்குத் தொடர்ந்து கிடைப்பதற்கு வாய்ப்பளிப்பீர்கள் என எண்ணுகிறேன். தங்கள் கலை இலக்கியப்பணி மென்மேலும் தொடர்ந்து பெருக எனது வாழ்த்துக்கள்.

– சந்திரபாலன் –
திருகோணமலை

* அன்புடையீர்,

அலை ஓசையின் இறுதி இதழில் வெளி வந்த 'மகாத்மாவின் மரணம்' என்ற என்ற சிறுகதையில் மேல் உள்ள கவியில் 'அப்பாவிகளாக வந்தவர்கள் இன்று அப்பாக்களாக போகிறார்கள் என்பதே சரியானது. அத்துடன் அக்கவிதையை எழுதியது கீதாஞ்சலி அல்ல, கவிதாஞ்சலி.

–மைக்கல். கொலின் –
திருகோணமலை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியர், அலை ஓசை, லண்டன்.

அலை ஓசையில் கல்விச்சேவையை அதிகரிப்பதற்கான விண்ணப்பம்

ஐயா,

அலைஓசை பத்திரிகையின் வாசகர்களாகிய நாம், முக்கியமாக கல்விச் சேவை உட்பட தாங்கள் அனைத்துப் பகுதிகளையும் திறம்பட நடாத்துவது கண்டு அகமகிழ்ந்து எமது உளம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். லண்டன் மாநகரில் பல கடைகளுக்கும் இடர்களுக்கும் மத்தியில் தனிமனிதனாக நின்று கொண்டு தங்கள் பத்திரிகை சிறந்த அக்கங்களுடன் வெளிவருவது கண்டு பாராட்டாமல் இருக்கமுடியவில்லை.

மேலும்தங்கள் பத்திரிகைக்கு, எம்சார்பிலும் எம்போன்ற பல்வேறு மாணவர்கள் சார்பிலும் தங்களிடம் தாழ்மையான வேண்டுகோள் விடுக்கின்றோம். அதாவது "MICRO PROCESSOR" என்ற பாடத்தை முக்கியமாக உள்ளடக்கியது. எமது தாய்நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து இன்னலுற்று வாழ்ந்து கொண்டிருக்கும் எமது இனத்திடம் எஞ்சியிருக்கும் கல்விச் செல்வமும் அழிந்துவிடுமோ என்ற அச்சம் இன்று பலரிடம் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. இவ்வேளையில் தங்கள் பத்திரிகையில் வெளிவரும் கல்விச் சேவை எமது மக்களிடையே கல்விப் பயிர் வளர்வதற்கு உரமூட்டுவதாகவும், பல பத்திரிகைகளுக்கு வழி காட்டியாகவும் அமையும் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. இவை தவிர இன்று எமது நாட்டில் இருந்து இடம் பெயர்ந்து இங்கு கல்வி கற்றுக் கொண்டிருக்கும் எம் போன்ற பல மாணவர்களிடையே COMPUTER ELECTRONICS MICROPROCESSOR என்ற பாடங்களில் பலத்த கஸ்டங்களை எதிர் நோக்கிய வண்ணம் உள்ளனர். காரணம்

1. மொழிப் பிரச்சினை

2. மேற் காட்டப்பட்ட பாடங்கள் பற்றிய அடிப்படை அறிவு இல்லாமை.

ஏனெனில் எமது நாட்டில் சுய மொழியில் பாடங்களைக் கற்றமையும் இங்கு மேற்கூறிய பாடங்களில் அடிப்படைக் கல்வி கற்பிக்கப்படாமல் இங்கு இடையில் இருந்து கற்பிக்க ஆரம்பித்தலுமாகும். முக்கியமாக MICROPROCESSOR இல் 8085 ஐ தங்கள் புத்தகத்தில் இலகுவான சொற்பிரயோகம் மூலம் அடிப்படையில் இருந்து விளங்கப்படுத்தி எம்போன்ற மாணவர்களுக்கு உதவுவீர்கள் என நம்புகின்றோம். முக்கியமாக கடந்தகாலப் பகுதியில் யாழ் பல்கலைக்கழகம், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி போன்ற நிறுவனங்களால் வெளியிடப்பட்ட விஞ்ஞான மாதாந்த சஞ்சிகைகள் உயர்தர மாணவர் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றது தெரிந்ததே. இது போன்று "அலை ஓசை" இதழும் இங்கு மட்டுமல்ல வேறு பலநாடுகளிலும், குறிப்பாக எமது தாயகத்திலும் புகழ்பெறவேண்டும் என்பதே எமது ஆவல். இது தவிர அலை ஓசையில் கல்விச் சேவையைத் தமிழ் மொழியிலும் வெளியிடுவீர்களா? இதனை சொந்த நாட்டிலும், வேறு பல நாடுகளிலும் தமிழ் மாணவர்களுக்கு மிகுந்த உதவியாக இருக்குமென்று நம்புகின்றோம்.

நன்றி. வாழ்க தமிழ் வளர்க தமிழ்த் தொண்டு. இங்ஙனம்

ஜெயந்த், அகிலன், அருணன், சுகுமார், மனமோகன், அன்பராஜ், விமல்ராஜ், றெசான், குணனந்தன், மகேஸ்வரன், கலைமோகன், தயாபரன், கணபதிப்பிள்ளை.....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுவர் களஞ்சியம்

## மகன் தந்தைக்காற்றும் உதவி

முன்னொரு காலத்தில் கருப்பையா என்னும் பெயருடைய பெரிய வியாபாரி நன்கு வியாபாரம் செய்து பெரும்பொருளீட்டியிருந்தான். அவனுக்கு அழகிய மனைவியும் மூன்று மைந்தரும் இருந்தார்கள். அவன் தனது இரண்டாவது மகன் அதிஸ்டமில்லாதவன் என்று சோதிடர் கூறிய காரணத்தினால் இரண்டாவது மகன் ராமனை என்றும் ஒதுக்கியே வந்தான். இதையிட்டு ராமன் ஆரம்பத்தில் கவலையடைந்தாலும் பின்னர் தாயாரின் அதீத அன்பால் கவலையை மறந்து வந்தான். தந்தை மற்ற இரு மைந்தர்களுக்கும் நல்ல ஆடைகள் பொருட்கள் வாங்கிக் கொடுத்த போதெல்லாம் ராமன் சற்று வேதனையடைந்தான். அதேவேளை ராமன் செய்யும் ஒவ்வொரு காரியமும் அவன் தந்தைக்குப் பிழையாகவே பட்டது. ராமன் படிப்பில் கெட்டிக்காரன். படிக்கும் வேளை தவிர மற்ற நேரங்களில் தந்தைக்கு உதவியாக கடையில் பல உதவிகள் செய்து வந்தான். ராமனைத் தந்தை பலவிதமாகவும் தண்டித்து அவனை வீட்டை விட்டுத் துரத்த முற்பட்டபோதும் தாயாரின் அன்பாலும் ஆதரவாலும் தொடர்ந்து அங்கு வாழ்ந்து வந்தான். திடீரென ஒரு நாள் ராமனின் தாயார் மாரடைப்பால் இறந்து விட்டார். அதன் பின்பு ராமனுக்குத் தந்தையின் இம்சை பலமடங்காகியது. கடைசியில் ராமன் செய்த ஒரு சிறு தப்புக்காக வீட்டை விட்டே துரத்தப்பட்டான். இருந்தாலும் ராமனின் மேல் பரிவு கொண்ட அயலவர்கள் உதவியுடன் அருகிலுள்ள தனி வீட்டில் ராமன் குடியமர்ந்தான். அங்கிருந்து கொண்டே ராமன் தனது படிப்பில் மேலும் கவனம் செலுத்தினான். அயலவர்களும் ராமனின் தந்தை என்றோ ஒருநாள் மனம் மாறி மகனை அழைப்பான் என்று எண்ணியிருந்தனர். ஆனால் அதற்கு மாறாக ராமனின் தந்தையோ தனது மற்றைய இரு மைந்தர்களுக்குமே பிரித்துக் கொடுத்து விட்டு தான் மட்டும் அதே வீட்டிலேயே இருந்து வந்தான். சொத்துக்கள் பிரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டவுடன் மற்றைய இருவருக்குமிடையில் ஏற்பட்ட பிரிவினால் இருவரும் வேறு வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டனர். ராமன் மட்டும் தனது சொந்த முயற்சியால் நன்கு படித்து நல்ல வேலையிலும் அமர்ந்து நன்கு சம்பாதித்தான்.

வயோதிப காலத்தில் ராமனின் தந்தை அந்த வீட்டில் தனியாக இருந்து வந்தார். அவரைக் கவனிப்பதற்கோ அவர் ஆசையாக வளர்த்த மற்றைய இரு மைந்தர்களோ ஒருபோதும் அவர் அருகில் இல்லை.

ஒருநாள் மாலை, ராமன் அவனது வேலைத்தலத்திலிருந்து வேலை முடிந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தான். அவனது அப்பா இருந்த வீட்டின் முன்னால் பலர் கூடியிருந்தனர். வீட்டுக்குள் இருந்து புகை வந்து கொண்டிருந்தது. உடனே சென்று விபரத்தை அறிந்த ராமன் அப்பா என்று அலறிய படியே நெருப்புச் சூழ்ந்திருந்த அந்த வீட்டின் கதவை உடைத்துப் புகுந்து தந்தையை நெருப்பு அணைவதற்கு முன்பு தூக்கி வந்து காப்பாற்றினான். தந்தை எழுந்து நடக்க முடியாமல் இருந்த போது விளக்கு ஒன்று எரிந்தபடியே தவறி விழுந்து சிறு கடதாசியில் [illegible] பற்ற அந் நெருப்பு முழு வீட்டையுமே எரித்ததாமே என [illegible]. ராமனின் தந்தை [illegible] உணர்ந்த வெட்கினார். வெறுத்த ஒதுக்கிய மகனின் [illegible] என்னும் போகத் தலைக நிலையை எண்ணி மிக வருந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன் மகனிடம் மன்னிப்புக் கோரினார். கடைசிக் காலத்திலாவது தனது தந்தை தன்னிடம் அன்பு செலுத்துகிறார் என்று எண்ணி ராமன் மிக மிக மகிழ்ந்தான்.

– சிவாகர் –

## தைப்பொங்கல்

இது உழவர் கொண்டாடும் நாள்.

அம்மா முற்றத்தில் கோலம் போட்டார்.

அப்பா புதுப்பானையுடன் நீரை அடுப்பில் வைத்தார்.

அண்ணை தோரணம் கட்டினார்.

பொங்கல், பழங்கள் சூரியனுக்குப் படைத்தோம்.

எல்லோரும் சூரியனை வணங்கினோம்.

–காயத்திரி. ஜெயராஜா.

## MY SISTER

MY SISTER'S NAME IS KAVITHA.
SHE IS 11 MONTHS OLD.
SHE HAS BROWN EYES AND BLACK HAIR.
HER BIRTHDAY IS IN DECEMBER 9th.
SHE DANCES TO THE MUSIC.
SHE IS BEGINING TO WALK AND CLIMB UP THE STARS.
ONE DAY ON A THURSDAY SHE FELL FROM THE BABY WALKER AND HUNT HER TUNGUE.
WHEN SHE IS OLD ENOUGH I WILL BRING HER TO TAMIL SCHOOL.
MY SISTER GET'S UP EARLY IN THE MORNING AND WAKES ME UP
I LOVE HER VERY MUCH.
MY SISTER IS NICE I LIKE HER .
SHE CAN CLAP HER HANDS AS WELL.

SUJAY.BALASINGAM
AGE (8)

www.tamilarangam.net

## குறுக்கெழுத்துப் போட்டி இல 7 விடை


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 2 ட | 3 ற் | 4 க | 5 ரை | 6 (shaded) | 7 சி | 8 கை |
| 9 வி | 10 யா | 11 ழ | 12 ன் | 13 (shaded) | 14 அ | 15 (shaded) | 16 தி |
| 17 (shaded) | 18 ஔ | 19 க | 20 ன் | 21 தி | 22 ட் | 23 டி | 24 (shaded) |
| 25 வி | 26 (shaded) | 27 யு | 28 ம் | 29 (shaded) | 30 டி | 31 (shaded) | 32 அ |
| 33 க | 34 ல் | 35 (shaded) | 36 (shaded) | 37 தா | 38 ய | 39 க | 40 ம் |
| 41 ட | 42 (shaded) | 43 பே | 44 ன் | 45 வ | 46 ல் | 47 ட | 48 ப |
| 49 க | 50 மு | 51 தை | 52 (shaded) | 53 ர | 54 (shaded) | 55 ன் | 56 ல |
| 57 வி | 58 அ | 59 (shaded) | 60 பா | 61 ம் | 62 பு | 63 (shaded) | 64 ம் |

( பிழை திருத்தம் :- கன்ன்ம் - கன்னம் )

<u>அலை ஓசை வாசகர்களுக்கு ஓர் நற்செய்தி</u> :-

இம்முறையிலிருந்து எமது குறுக்கெழுத்துப் போட்டிக்குச் சரியான விடையளிக்கும் முதல் அதிஸ்டசாலிக்கு 10 பவுண்கள் பரிசளிக்கவுள்ளோம். இப்பரிசை அலைஓசைக்காக அன்பளிப்பாகத் தருபவர் சி.ந.ரகுராம். பரிசுக் கூப்பன் கீழே இணைக்கப்பட்டுள்ளது. இலங்கை வாசகர்கள் மட்டும் கூப்பன் இல்லாமலும் இப்பரிசுப் போட்டியில் கலந்து கொள்ளலாம். பரிசுப்போட்டிக்கான இறுதித் திகதி 25.02.1989. அனுப்ப வேண்டிய முகவரி அலை ஓசையின் முதற்பக்கத்தில் உள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல 8



NAME: ........................

ADDRESS: ..............................

..............................

..............................

..............................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி இல 8 வினா

1. தமிழ் இலக்கண விளக்க நூல்
9. பழைய வீடுகள் இவற்றிலானவை.
11. அச்சத்தின் மறுபெயர், முதலெழுத்து விடுபட்டுள்ளது. குழம்பியுள்ளது.
16. முக்கால நிகழ்வுகளையும் முழுமையாகத் தருவதாகத் தம்பட்டமடித்துக் கொள்வது.
21. அவதானத்தின் மறு பெயர்.
26. மங்கைக்கு மறு பெயர்.
33. மிகவும் பெரிய எனப் பொருள்படும். சிவனை ___ பொருள் என அழைப்பர்.
37. மன்னனின் ஓர் அணிகலன்.
42. இவனை எல்லோரும் வெறுப்பார்கள்.
51. இசை பாடிய நாயன்மார் உருவச்சிலைகள் சிதம்பரத்திற்கு வந்த நிகழ்ச்சி வரலாறு படைத்தது (குழம்பியுள்ளது)
59. அனேக உயிரினங்களின் ஆரம்ப உணவு.
66. ஆதிகால வாசிகள் இவ்வுரியை உடையாக அணிந்தனர்.
72. மிகப் பிரபலமான ஒரு விளையாட்டு.
81. மொட்டின் மறுபெயர். இடையெழுத்து விடுபட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
86. அழகிய முகத்தை இதற்கு ஒப்பிடுவர். (குழம்பியுள்ளது)
91. பழம்பெரும் தமிழ்க் காவியம்.

1. ஆரம்பத்தின் மறுபெயர், 2வது எழுத்து விடுபட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
2. சேரோடும் பூமி கோயிலானால் எரோடும் பூமி இதுவாகும் (கீழிருந்து மேல்)
6. கிராமத்தின் தலைவி.
7. உதயத்திற்கும் அந்திக்கும் இடைப்பட்ட வேளை. (குழம்பியுள்ளது)
9. இதற்கு விளக்கம் தெரியாததால் படைத்தல் சில காலம் தடைப்பட்டது.
18. மனித உள்ளுறுப்புக் குழம்பியுள்ளது.
23. இலங்கையின் நாளிதழ் குழம்பியுள்ளது.
30. ஜலதோஷத்துடன் கூட வருவது.
42. இலங்கையில் இரத்தினத்திற்குப் பெயர் பெற்ற மாகாணம்.
35. மனித அவயவம், மேலிருந்து கீழ்.
46. கண்ணனின் பெயர் குழம்பியுள்ளது.
57. மழைகாலத்தில் வானம் இப்படியிருக்கும் (கீழிருந்து மேல்)
59. தகப்பனின் தகப்பன்.
78. சுவை மிகுந்த தமிழ் உபஉணவு. (குழம்பியுள்ளது)
80. மிகவும் வலிமையானது எனப் பொருள்படும். (குழம்பியுள்ளது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Tamil Orphans Trust

42, Arundel Drive, Harrow, Middx. HA2 8PR
Phone: 01 - 422 0012

***Registered Charity No: 327809***


Sri Lankan Tamil residents in Britain have been approached for help on behalf of large numbers of Tamil children orphaned during the recent unrest. A number of Tamils in Britain have been considering how to help these poor children. Consultations has led to the founding of the above Trust in March 1988, with defined objectives.

The following is an abstract from the Trust's constitution:

The trust shall be administered by a board of trustees consisting of nine members, elected once every three years by paid up members. Members shall pay a monthly subscription of £2.50 (or more if the member so wishes). These subscriptions and donations shall be the basic source of funds for the Trust. The first accounts of the Trust will be published and tabled before the membership in the first half of July 1989. Details of the activities of the Trust during the first six months of its existence will be made available in December 1988.

Objectives of the Trust.

*Give financial assistance* to organisations engaged in caring for Tamil orphans in Sri Lanka, that have requested for help *and are deemed to be in need.*

*Adopt selected orphans* by negotiating with suitable institutions, including arranging for their full education.

In special cases, give financial support to individual families who have volunteered *to care for orphans at their own homes.*

Appoint such agencies as may be necessary in Sri Lanka to represent the Trust & collect information & coordinate activities.

Embark on such activities as are necessary *to further the objectives of the Trust.*

ALL WELL WISHERS ARE KINDLY REQUESTED TO ENROL AS MEMBERS BY SENDING A COMPLETED MEMBERSHIP FORM & BANKERS ORDER.

A DESERVING CAUSE, PLEASE EXTEND YOUR SUPPORT.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விராஜ் மெண்டிஸ் பற்றிய பி பி சியின் கலந்துரையாடல்

மன்செஸ்டர் சேர்ச் ஒப் அசென்சன் கிறீஸ்தவக் தேவாலயத்தினுள் தஞ்சமடைந்திருந்த ஸ்ரீலங்காவைச் சேர்ந்த விராஜ் மெண்டிஸ், 18.01.89 அன்று அதிகாலை 7.30 மணிக்கு பொலிசாரினால் கைது செய்யப்பட்டு லண்டனுக்குக் கொண்டு வரப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டார். இதனை லண்டனிலுள்ள பத்திரிகைகள், தொலைக்காட்சி ஆகியன மிகப் பரபரப்பாகப் பிரபல்யப்படுத்தின. இவ்விடயம் சம்பந்தமாக பி.பி.சியில் 19.01.89 அன்று காலை 9 மணிக்கு 'கில்ரேய்ஸ்' என்னும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் ஆராயப்பட்டது. சமுகாயத்தின் பல மட்டங்களிலுமுள்ளவர்களால் இவ்விடயம் விவாதிக்கப்பட்டது. அங்கு பேசியவர்களின் சில கருத்துக்களை எமது வாசகர்களுக்குத் தமிழில் தருகின்றோம்.

<u>நிரேது</u>:-(விராஜுக்குக் காவலிருந்தவர்) நேற்றுக்காலை 7.30 மணியளவில் தேவாலயத்தின் வாசலில் அமர்ந்திருந்தேன். சுமார் 100 பொலிசார் வரை உள்ளே வருவதைப் பார்த்ததும் ஏதோ விபரீதம் நடக்கப் போகின்றதென்பதை உணர்ந்து கொண்டேன். உடனே மாடிப்படி ஓடி கரேன் (காவலிலிருந்த மற்றொரு பெண்மணி) இடம் விடயத்தைத் தெரிவித்து விட்டு அபாய மணியை அலற விட்டேன். அதன் பின்னர் விராஜ் இருந்த அறைக்குள் சென்று உட்புறமாகத் தாளிட்டு விட்டேன். பொலிசார் வெளியே இருந்தபடியே அறையைத் திறக்குமாறு வற்புறுத்தி னார்கள். நாம் திறக்காது போகவே சில உபகரணங்களைப் பயன்படுத்திக் கதவை உடைத்தார் கள். அதன்பின்னர் விராஜைக் குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்றனர்.

<u>அன்றலி</u>:- நான் தேவாலயத்தினுள் உறங்கிக் கொண்டிருந்தேன். ஆலயத்தின் அபாய மணியின் அலறலைக் கேட்டு எழுந்து பார்த்தபோது 100 பொலிசார் வரை தேவாலய வளவினுள் நிற்பதைப் பார்த்ததும் விடயத்தை ஊகித்துக் கொண்டேன். உடனே சைக்கிளை எடுத்துக் கொண்டு ஊருக்குள் ஓடிச்சென்று எல்லோருக்கும் விடயத்தைத் தெரிவித்தேன். அதற்குள்ளாகவே அபாயமணியின் ஒலியைக் கேட்டு சுமார் 50 பொதுமக்கள் ஆலயத்திற்குள் வந்து விட்டனர்.

<u>ஓர் ஆங்கிலேயர்</u>:- விராஜ் நிச்சயமாக நாடு கடத்தப்பட வேண்டியவர். அவரை உண்மையான அகதி என்று ஏற்றுக்கொள்ள முடியாது. அவருடைய இனத்தவருடன் இருக்கவேண்டுமென்றால் அவர் தென்னிந்தியாவுக்குச் சென்றிருக்க வேண்டும். இங்கு எதற்காக வந்தார்? இங்கு வரும் அகதிகள் அனைவரும் தமது வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளவே வருகிறார்கள்.

<u>ஹெசர்சேல் (பாராளுமன்ற உறுப்பினர்)</u>:-விராஜ் 1973ம் ஆண்டு இங்கு வந்தார். இங்கு வருவதற்கு முன்னர் அவர் அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கவில்லை. இரண்டு வருடங்கள் கழித்து அவர் தலைமறைவாகி விட்டார். ஆனால் எம்மால் கண்டுபிடிக்கப்பட்டு எமது அரசாங்கத்தின் படித்தில் முன்பு நடைவைகள் பரீட்சைக்குத் தோற்றித் தோற்றிப் போனார். பத்து ஆண்டுகள் கழிந்து விட்டது. அவர் இலங்கைக்குச் செல்ல வேண்டும் எனக் கூறினோம். இக்கட்டத்தில் தான் அவர் தமிழர் பிரச்சனையைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அது மட்டுமல்ல. ஒரு ஆங்கிலேயப் பெண்ணை மணந்து கொண்டார். ஆனால் அந்தத் திருமணமானது அவரை இங்கே தங்க வைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதென்பதை அந்தப் பெண்ணே ஒத்துக் கொண்டார். அவர் நிச்சயம் திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்.

<u>அருட்திரு ஜோன் மெத்தியூஸ் (தேவாலயத்தின் அருட்தந்தை)</u>:- விராஜின் திருமணம் உண்மையா னதென்றும் அவரை இங்கு தங்க வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல என்றும் முன்னொரு சந்தர்ப் பத்தில் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது. மீண்டும் அதைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமே இல்லை.

<u>திரு. மகரசிங்கம் (தலைவர், தமிழ் ஆக்சன் கொமிட்டி)</u>:- இந்த விவாதம் தடம் மாறிப் போவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாகவே நினைக்கிறேன். இங்கு பேசிய பாராளுமன்ற உறுப்பினர் ஏதோ பழைய ஞாபகத்தில் பேசுகின்றார். தற்போதுள்ள நிலைமையை அவதானிப்போம். ஒரு மனிதப்பிறவிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. 1962 ம் ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறியவன் நான். இலங்கையில் தமிழர்கள் படும் அவதியை அன்றிலிருந்தே வெளிப்படுத்த ஆரம்பித்தோம். 150 ஆண்டுகளாக பிரிட்டிசார் எம்மை ஆண்டார்கள். ஆனால் சுதந்திரம் தந்த போது எம்மை சிங்களவருக்கு அடிமையாக்கி விட்டார்கள். எனவே தான் நாம் இங்கு வந்தோம். இரண்டு நாட்களுக்கு முன்னர் அச்சம் காரணமாக இந்த நாட்டிற்குத் தப்பியோடி வந்த ஒரு சிங்கள இளைஞனைச் சந்தித்தேன். அவருடைய கருத்துப்படி விராஜ் இலங்கைக்குத் திரும்பிச் சென்றால் அவரது உயிருக்கு நிச்சயம் ஆபத்து ஏற்படும் என்பது ஊர்ஜிதமாகிறது.

காமினி (ஒரு சிங்களவர்) :- அவர் ஒரு அரசியல் அகதியல்ல. இந்நாட்டுக்கு மாணவராக வந்தவர். இங்கு இருக்க முடியாத நிலை ஏற்பட்டதும் சில மார்க்சிய வாதிகளின் உதவியை நாடினார். இன்று இலங்கையில் தனது உயிருக்கு உத்தரவாதமில்லை என்று திரும்பிச் செல்ல முடியாதென்று அடம் பிடிக்கிறார். இத்தனைக்கும் இலங்கையில் எந்தவொரு மார்க்சிய வாதியுடனும் அவருக்குத் தொடர்பு இருந்ததில்லை.

குலசீலன் :- நான் ஒரு தமிழன். ஒரு சிங்களவருக்காகப் பரிந்து பேசுகிறேன் என்றால் அதில் அர்த்தம் இருக்க வேண்டும் என்பது புரிய வேண்டும்.

ஜான் சாவ் (சர்வதேச மன்னிப்புச் சபை) :- 1985ம் ஆண்டு முதல் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் பற்றிய 19 அறிக்கைகளை வெளியிட்டோம். விராஜினுடைய விடயத்தில் இவை எதுவுமே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவில்லை. சட்ட நுணுக்கங்கள் மட்டுமே கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

அங்கயற்கண்ணி :- அவர் இங்கு வருவதற்கு முன்னர் தமிழரை ஆதரித்தாரா இல்லையா என்பது பிரச்சனையல்ல. இப்பொழுது அவர் தமிழர் கோரிக்கைகளை ஆதரிக்கிறார். ஆகவே நான் அவர் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சுகிறோம்.

மெலன் :- 1951 ம் ஆண்டு ஜெனீவா உடன்படிக்கையில் பிரிட்டன் கையெழுத்திட்டது. ஆகவே அகதிகளை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். ஆனால் அன்றைய நிலையில் ஆசியாவிலிருந்தும் ஆபிரிக்காவிலிருந்தும் அகதிகள் வருவார்கள் என்று பிரிட்டன் எதிர்பார்க்கவில்லைப் போலும். அவர்களுடைய கண்ணில் ஐரோப்பிய அகதிகளும் கம்யூனிசத்தின் பிடியிலிருந்து தப்பி வருபவர்கள் மட்டுமே அகதிகளாகத் தெரிகிறார்கள். இது நியாயந்தானா?

ஒரு ஆங்கிலேயர் :- அவர் இங்கு இருக்க அனுமதிக்கப்படக் கூடாது. இங்கு வரும் அகதிகள் அச்சத்தின் காரணமாக இங்கு வரவில்லை. வறுமையின் காரமாக இங்கு வருவதாக நினைக்கின்றேன். அவர்களையெல்லாம் திருப்பியனுப்பி விட்டு அவர்களது நாட்டிலேயே அவர்கள் நன்றாக வேலை செய்வதற்குக் கற்றுத்தர வேண்டும்.

அருட்திரு டேவிட் கஸ்லாம் (பிரித்தானிய திருச்சபைகள் சங்கம்) :- இங்கு வரும் அகதிகள் வறுமையின்காரணமாக வருகிறார்கள் என்றால் அதில் எமக்கும் பங்கு இருக்கிறது. அந்தந்த நாட்டு வளங்களை அவர்களது அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமல் எமது தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டோம். இங்கு வரும் அகதிகளின் உயிருக்கு அவர்களது நாட்டில் பத்திலொரு பங்கு ஆபத்து ஏற்படுமாக இருந்தாலும் அவர்களைத் திருப்பியனுப்ப நான் அனுமதிக்க மாட்டேன்.

கிறிஸ்தோபர் கோடென் :- (மனோதத்துவ நிபுணர்) இங்கு நாம் அகதிகளை நல்ல முறையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்துவது குறைவு. அடைக்கலம் கோரும் போது, அவர்கள் நமக்கு ஏற்பட்ட துயரங்களை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. முறையாக வேலை செய்ய முடியாமலும் கல்வி கற்பதற்கு முடியாமலும் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே நாம் நமது அணுகுமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஜோன் (ஜேர்மனிய அகதி) :- இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் நான் இங்கே வந்த போது இருந்த நிலை வேறு. தற்போதுள்ள நிலை வேறு. அன்று அகதிகள் வருகையை அரசாங்கம் கட்டுப்படுத்த முயன்றாலும் சமுதாயம் அவர்களை ஏற்றுக் கொண்டது. ஆனால் இன்று அரசாங்கம் அகதிகளை ஏற்றுக் கொள்ள முயன்றாலும் சமுதாயம் அவர்களை ஏற்பதைப் பொறுத்துக் கொள்ளப் போவதில்லை.

அருட்திரு ஜோன் மெற்றியூன் :- அவரை நாம் ஒழித்து வைக்கவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்பதை அனைவரும் அறிந்திருந்தார்கள். ஆகவே நான் சட்டத்தை மீறியதாக என் மீது குற்றம் சாட்ட முடியாது.

அருட்திரு டேவிட் கஸ்லாம் :- ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகள் எம்மை விட 8 மடங்கு அதிகமாகவே அகதிகளை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஹெகர் கேல் :- எம்முடைய நாட்டுடன் ஒப்பிடும்போது பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளின் நிலப்பரப்பு என்ன?

– நேரில் கலந்து கொண்டவர் –

கணேசன். மேகநாதன்
(உதவி ஆசிரியர்)

புத்தாண்டு-பொங்கல் வாழ்த்துக்கள்.

YOGA & CO

SOLICITORS &

ADMINISTRATORS of OATHS

47 Booth Road
Colindale
London NW9 5JS.
Tel: 01 - 205 0899

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுவிழா

தமிழ்ச்சங்கத்தின் நான்காவது ஆண்டுக் கலைவிழா சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 20ம்திகதி வோல்தம் பொறஸ்ட் தியேட்டரில் நடைபெற்றது. கலைவிழாவானது சங்கத்தலைவர் திரு.நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இதற்குப் பிரதம விருந்தினராக வோல்தம் பொறஸ்ட் கவுன்சிலர் திரு.பிராங்கிளின் ஜோர்ஜ் அவரது பாரியாருடன் வருகை தந்து நிகழ்ச்சிகளுக்கு மெருகூட்டி ஒரு அழகான சிற்றுரையும் ஆற்றினர்.

மாலை 6.45 மணிக்கு பிரதம விருந்தினர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த நிகழ்ச்சிகள் நள்ளிரவு வரை நீடித்தது. பல்வேறு இன மக்களும் எமது கலாச்சார நிகழ்ச்சிகளான நடனம், வயலின், பாட்டு, நாடகம் ஆகியவற்றைச் சுவாரசியமாக ரசித்தமை பாராட்டுக்குரியது. இந்நிகழ்ச்சிகளில் வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்க மாணவ மாணவியரும், மேற்கு லண்டன் தமிழ்ப்பாடசாலை மாணவியரும் ஈஸ்ட் உறாம் திருவள்ளுவர் பாடசாலை மாணவியரும் கலந்து பங்கு கொண்டமை குறிப்பிடத் தக்கது. புலவர் சிவானந்தனின் தயாரிப்பிலுருவான இறைதரிசனம் நாடகம் நகைச்சுவையுடன் கூடிய சிந்திக்க வைக்கும் அம்சமாக விளங்கியது.

முதற் படத்தில் வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்க மாணவியரின் நிகழ்ச்சியையும் இரண்டாவது படத்தில் மேற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவியரின் நிகழ்ச்சியையும் மறுபக்கத்தில் உள்ள படத்தில் ஈஸ்ட் உறாம் திருவள்ளுவர் பாடசாலை மாணவியர் பங்கு கொள்ளும் நிகழ்ச்சியையும் காணலாம்.






www.tamilarangam.net

# பொங்கல் கவிதைகள்

ஈழமானம் காத்தனங்கள் ஏற்றமிகு வீரர்கள்
நாளுமிந்த வீரர்களால் நாளையப்போல சுடுகையில்
வாழுகின்ற காலந்தன்னில் வீரமரணம் ஏற்கும்போது
பாழமிந்த ஆட்சிதன்னில் பொங்கலென்ன பொங்கலோ !


சிங்களத்துக் காடையர்கள் செல்லடித்து நின்றவேளை
பொங்கிநின்று எம்மைக்காக்கப் போர்தொடுத்த மறவர்கள்
பொங்கலிந்த வேளைதன்னில் பரிதவிக்க வாழ்கையில்
எங்களுக்கு மட்டுமென்ன பொங்கலென்ன பொங்கலோ

பொட்டிழந்த பூவையர் பிதாவிழந்த பிள்ளைகள்
கொட்டுகின்ற குண்டினாலே காலமான சோதரர்
பட்டகாலில் பட்டதென்று தந்தைசாகத் தாயும்சேர
கட்டமில்லா மழலைகட்குப் பொங்கலென்ன பொங்கலோ !

இருள்கவிந்த வேளையில் இராணுவத்தின் சாயலில்
மருளுகின்ற மாந்தர்மீது மிரட்டவைக்க ஆயுதம்
குரல்கொடுக்க யாருமற்ற கொடிய அந்த வேளையில்
வறுகவந்த அரக்கருக்கு வேட்டுமிந்தப் பொங்கலோ !

பொங்கலன்று பானைதன்னில் பாதிசரியும் வேளைதன்னில்
மங்கலத்தின் ஓசையென்று பாலர்சீன வெடிகளோடு
எங்களீழ நாடுதன்னில் பொங்கிநின்ற காலம்போய்
இன்றொலிக்கும் வேட்டொலிக்கு இன்னமொரு பொங்கலோ !

ஆரணி. சாந்தகுமார்.



www.tamilarangam.net

# இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள்

சென்ற இதழின் தொடர்ச்சி

திருமலை மாவட்டத்தில் பின்வரும் குடியேற்றத் திட்டங்கள் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான பின் நிகழ்ந்துள்ளன.

1. அல்லை - கந்தளாய் வீதியில் கரும்புத் தோட்ட எல்லையிலிருந்து 12ம் மைல்கல் வரை ஏறக்குறைய 3000 பேரை உள்ளடக்கிய 500 புதிய சிங்களக் குடும்பங்கள் திருகோணமலை மாவட்டத்துள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

2. அல்லை - கந்தளாய் வீதியில் சூரியபுர எனும் கிராமத்தில் மகாவலி கங்கைப்பாலத்திற்கு அருகாமையில் ஏறக்குறைய 1800 பேரை உள்ளடக்கிய 300 சிங்கள குடும்பங்களை திருமலை மாவட்டத்துள் குடியமர்த்த எல்லா ஒழுங்குகளும் முடிவடைந்துள்ளன. பலர் குடியேறியுள்ளனர்.

3. திருமலை - கண்டி வீதியில் கந்தளாய்க்கும் - அளுத் ஓயாவிற்குமிடையிலும், பாலம் போட்ட ஆற்றிற்கும் தம்பலகாமத்திற்குமிடையிலும் அரச காணிகளிலும் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளிலும் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

4. திருமலை-அநுராதபுரம் வீதியில் 10 ஆம் மைல் கல்லுக்கு அருகில் (கித்துல் ஊற்று எனுமிடத்தில்) புதிய சிங்களக் குடியேற்றங்கள் உருவாகியுள்ளன.

5. திருமலை நகர உதவி அரச அதிபர் பிரிவில் ஆண்டாள் குளம் பகுதியில் பல சிங்களவர்கள் காணி பெற்றுள்ளனர்.

6. 1987 அக்டோபரின் பின் அகதிகளான சிங்களவர்களுக்கு பிரடரிக் கோட்டைக்கருகில் தற்காலிக வசிப்பிடங்களும், பாடசாலையும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சிங்களக்குடியேற்றங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திலே கெவுளியாமடு எனுமிடத்தில் ஏறக்குறைய 3000 சிங்களவர்களை உள்ளடக்கிய 500க்கு மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் புதிதாகக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஏற்கனவே இப்பகுதியில் கெமுனுபுர, மங்கள ஓயா, மங்கள கம என்ற பெயர்களில் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. செங்கலடி, பதுளை வீதியிலும், உன்னிச்சைக்கருகில் உள்ள இருநூறுவில் எனும் பகுதியிலும் வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சின்னவத்தைப் பகுதியிலும் குடியேற்றங்கள் நிகழ்கின்றன. அம்பாறை மாவட்டத்திலும் மஹாஓயா, பதியத்தலாவ பகுதியிலும் திகவாபி பகுதியிலும் குடியேற்றங்கள் நிகழ்கின்றன.

## மீனவர் குடியேற்றங்கள் :-

கிழக்கு மாகாணத்தில் கடல் வளத்தை சுரண்ட காலத்துக்கு காலம் வருகை தரும் தென்னிலங்கை மீனவர்களுக்கு நிரந்தர வீடுகளையும், ஏனைய தேவைகளையும் வழங்கி மீனவக்குடியேற்றத் திட்டங்களை கடற்றொழில் அமைச்சு ஏற்படுத்தியுள்ளது. திருமலைமாவட்டத்தில் திருமலை நகருக்கருகில் விஜித்தபுர, நெல்சன்புர, சிறிமாபுர குடியேற்றங்களையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மாங்கேணி, வலைவாடி, புன்னைக்குடா குடியேற்றத் திட்டங்களையும் அம்பாறை மாவட்டத்தில் அலுகங்குடா குடியேற்றத்தையும், கடற்றொழில் அமைச்சு செய்துள்ளது.

## கைத்தொழில் குடியேற்றங்கள் :-

கிழக்கு மாகாணத்தில் முதலாவது தொழிற்சாலையாக வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலையும் இதன்பின்னர் புல்மோட்டையில் இல்மனைட், ரூட்டைல், ஷேர்கோன் என்னும் கனிப்பொருட்களை உற்பத்தி செய்யும் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனமும், அம்பாறை மாவட்டத்தில் ஹிங்குரானையில் சீனித் தொழிற்சாலையும், திருமலை மாவட்டத்தில் கந்தளாயில் இன்னுமொரு சீனித் தொழிற்சாலையும், இறக்காமத்தில் ஓட்டுத் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டன. வாழைச்சேனை கடதாசி ஆலையில் பெரும்பாலான தொழிலாளர்கள் தமிழ் பேசும் மக்களாக உள்ளபோதும் ஏனைய தொழிற்சாலைகள் அனைத்திலும் பெரும்பான்மையான ஊழியர்கள் சிங்களவர்களே. எமது தாயகத்தின் மூல வளங்கள் அன்னியருக்குத்தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது கவலைக்குரிய விடயமே.

தனியார் துறை மூலம் அமைக்கப்பட்ட ''பிரிமா'' போன்ற தொழிற்சாலைகளில்கூட அரசின் வற்புறுத்தல் காரணமாக சிங்கள ஊழியர்களே பெரும்பான்மையாக நியமிக்கப்பட்டுள்ளனர். ''பிரிமா'' மா ஆலையில் நியமனம் பெற்ற 451 ஊழியர்களில் 379 பேர் சிங்களவரே. பிரிமா ஆலை ஊழியர்களுக்காகத் தேசிய வீடமைப்பு அதிகார சபை கிட்டத்தட்ட 400 வீடுகளைக் கொண்ட ''தானியகம்'' என்ற மாதிரிக் கிராமத்தையும் உருவாக்கி சீனகுடாப் பகுதியில் சிங்கள ஆக்கிரமிப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

## உல்லாச பயண அபிவிருத்தியும் குடியேற்றமும் :-

உல்லாச பயண அபிவிருத்தி என்ற போர்வையிலும், கிழக்கு மாகாணத்தில் பெருந்தொகையான அரச காணிகளும், தனியார் காணிகளும் சிங்கள முதலாளிகளுக்கு கையளிக்கப்பட்டன. உல்லாச பயணத் துறை மூலம் வேலை வாய்ப்பை பெற்றவர்கள். கிழக்கு மாகாண மக்கள் அல்ல; வெளியிடத்துச் சிங்களவர்களே. அம்பாறையில் அறுகங்குடா பகுதியும் மட்டக்களப்பில் கல்குடா பாசிக்குடா பகுதியும், திருமலையில் கருமலையூற்று, நிலாவெளி, சாம்பல் தீவு, உப்புவெளி பிரதேசங்களில் உல்லாச பயண அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் அபிவிருத்திகளுக்காக தமிழ் மக்களின்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்பட்டன. சீனக்குடாவை அண்டியுள்ள குருமலையூற்று-மாபில் பீச் பகுதியில் 3000 ஏக்கர் அரச காணி உல்லாசப் பயண அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டது. திருமலை மாவட்டத்தில் மேலும் உப்புவெளி தொடக்கம் இறக்கக் கண்டி வரை திருமலை - புல்மோட்டை வீதியில் கடல் பக்கம் அமைந்த சகல அரச தனியார் காணிகளும் உல்லாச பயண அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டன

## புனித நகர் அபிவிருத்தியும் குடியேற்றமும் :-

புனிதநகர் அபிவிருத்தி என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்தில் சிங்கள ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் புராதன பௌத்த ஆலயங்களின் வழிபாடுகள் காணப்படுவது உண்மையே. வடக்கிலும் கந்தரோடை, நயினாதீவு போன்ற இடங்களிலும் பௌத்த வழிபாடுகள் உள்ளன. ஆகவே வடகிழக்குப் பகுதியில் பௌத்த வழிபாட்டுத் தலங்களின் வழிபாடுகள் காணப்படின் அங்கு தமிழ் மொழி பேசிய பௌத்த மக்கள் வாழ்ந்தார்கள் என்று ஏற்கலாமேயொழிய இன்றைய இலங்கை அரசு கருதுவதைப்போல அவை சிங்களவர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் அல்ல. சிங்கள மேலாதிக்கத்தை வலுப்படுத்த அரசு இந்த அழிபாடுகளைப் பயன்படுத்தியுள்ளது. புனித நகர் அபிவிருத்தி என்ற போர்வையில் சேருவில், வில்கம், தியாய பௌத்த ஆலயம், தீகவாவி பௌத்த ஆலயம் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக கோடிக்கணக்கான பணத்தை செலவிட்டுள்ளது.

1968-ல் தீகவாபி ஆலய அபிவிருத்திக்கென்று முஸ்லீம் மக்களுக்கு சொந்தமான 237 ஹெக்டெயார் காணி சுவீகரிக்கப்பட்டது. இம்மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டபின் பௌத்த பிக்குகளும், சிங்களவர்களும் குடியேற்றப்பட்டனர். சுவீகரிக்கப்பட்ட காணிகள் 120 ஹெக்டெயார் காணி கரும்புச் செய்கைக்கென்று பின்னர் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டது இந்த பௌத்த ஆலயத்தின் அபிவிருத்திக்கென மேலும் 515 ஹெக்டெயார் காணி முஸ்லீம் மக்களிடமிருந்து சுவீகரிக்கப்படவுள்ளது.

சிறில் மத்தியூ அமைச்சராக இருந்தபோது சிங்கள ஆக்கிரமிப்பை கிழக்கிலும் வடக்கிலும் வலுப்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். தனது அமைச்சின் கீழுள்ள சகல ஆலணி சக்திகள் அனைத்தையும் அவர் பயன்படுத்தினார். கந்தளாயில் வண்ணாத்தி பாலம் என்ற இடத்தில் காணப்பட்ட பழைய வழிபாடுகளை உருக்கு கூட்டுத் தாபனத்தின் நிதிநிலைக் கொண்டு புதிய ஆலயமாக்கினார். கோமரன் கடவையில் நன்கிரி உல்பொத்த என்ற இடத்தில் உள்ள புராதன ஆலயத்தின் புரைமைப்புக்கு பெற்றோலியம் கூட்டுத் தாபனத்தைப் பயன்படுத்தினார். குச்சவெளியில் இலங்கைக்குளம் என்னுமிடத்தில் உள்ள பழைய வழிபாடுகளைப் புரைமைக்க ஒட்டுப் பலகை கூட்டுத் தாபன நிதிகளைப் பயன்படுத்தினார். இவ்வாறு அரசநிதி மூலம் சிங்கள, பௌத்த மேலாதிக்கம் கிழக்கில் வளர்க்கப்பட்டது.

## குடியேற்றங்களும் ஊர் பெயர் மாற்றங்களும் :-

கிழக்கு மாகாணத்தில் அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுப்பட்ட குடியேற்ற நடவடிக்கையாலும் இம் மாகாணத்தின் இன விகிதாசாரம் மோசமாக பாதிக்கப்பட்டதோடு, பல்வேறுபட்ட ஊர் பெயர் மாற்றங்களும் ஏற்பட்டன. திருமலை மாவட்டத்தில் இடம்பெற்ற ஊர் பெயர் மாற்றங்கள் சில பின்வருமாறு :—

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| வான் ஆறு | வான் எல |
| அரிப்புச் சந்தி | அலி ஓலுவ |
| கல்லாறு | சோமபுர |
| நீலாப்பளை | நீலர்ப்பெல |
| திரப்பமடு | திரப்பண |
| பனிக்கட்டி முறிப்பு | பனிக்கட்டியாவ |
| பெரிய விளாங்குளம் | மஹாதிவுல் வெல |
| முதலிக் குளம் | மொரவேவ |
| குமரேசன் கடவை | கோமரன் கடவெல |
| ஆண்டான் குளம் (குளம்) | ஆனந்தவெவ |
| ஆண்டான் (கிராமம்) | ஆனந்த் கம |
| ஆண்டான் குளத்தின் பகுதி | பற்றிஸ்புர |
| மட்கோவ் | மஹாமாயாபுர |
| வல்வேவ் | நெல்சன்புர |
| கஞ்சிமடம் | அபயபுர |
| உப்புவெளியின் பகுதி | சிறிமாபுர |
| மடத்தடியின் பகுதி | கமேதகம |
| 4-ம் கட்டை | சிங்கபுர |
| சீனக்குடாவின் பகுதி | நாலாந்தபுர |
| புடவைக்கட்டு | சாகரபுர |
| கஞ்சிமடத்தின் பகுதி | மிஹிந்துபுர |
| கங்கை | கங்காசாகர |
| வென்றரசன்புரம் | வென்டரசன்புர |

அம்பாறை மாவட்டத்திலும் கெவுளியாமடுப் பகுதி, கெமுனுபுர, மங்கள ஓயா மங்களகம என்று அழைக்கப்படுகிறது. கல் ஓயாப் பள்ளத்தாக்கிலும் பல ஊர்ப் பெயர் மாற்றங்கள் தமிழ் மக்களுக்குப் பாதகமான முறையில் அமைந்துள்ளன.

எனவே பொருத்தமானதொரு குடியகல்வுக்கொள்கை அமுல் படுத்துவதும், தற்போது மேற்கொள்ளப்படும் குடியேற்றங்களையும் தடுத்து நிறுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பைப் பொறுப்பேற்றுக்கொண்டவர்கள் மேற்கொள்ளவேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.



நன்றி → தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்

## மாசி

| | | |
|---|---|---|
| 4 | சனி | பிரதோச விரதம் |
| 6 | திங்கள் | அமாவாசை |
| 9 | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| 11 | சனி | சஷ்டி விரதம் |
| 13 | திங்கள் | கார்த்திகை விரதம் |
| 18 | சனி | பிரதோச விரதம் |
| 19 | ஞாயிறு | நடேசர் அபிஷேகம் |
| 20 | திங்கள் | மாசி மகம்/ பௌர்ணமி |

## பங்குனி

| | | |
|---|---|---|
| 5 | ஞாயிறு | பிரதோச விரதம் |
| 6 | திங்கள் | மகா சிவராத்திரி விரதம் |
| 7 | செவ்வாய் | அமாவாசை விரதம் |
| 11 | சனி | சதுர்த்தி விரதம் |
| 12 | ஞாயிறு | கார்த்திகை விரதம், சஷ்டி விரதம் |
| 19 | ஞாயிறு | பௌர்ணமி |
| 20 | திங்கள் | பங்குனி பொங்கல், அம்பாள் அபிசேகம். (1) |
| 21 | செவ்வாய் | பௌர்ணமி |
| 22 | புதன் | பங்குனி உத்தரம், பார்வதி கல்யாணம். |
| 27 | திங்கள் | பங்குனி பொங்கல், அம்பாள் அபிஷேகம் (2) |

## சித்திரை

| | | |
|---|---|---|
| 3 | திங்கள் | பிரதோச விரதம், பங்குனிப் பொங்கல், அம்பாள் அபிசேகம் (3) |
| 5 | புதன் | அமாவாசை விரதம் |
| 8 | சனி | கார்த்திகை விரதம் |
| 9 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| 10 | திங்கள் | பங்குனிப் பொங்கல் (4) |
| 11 | செவ்வாய் | சஷ்டி விரதம் |
| 14 | வெள்ளி | தமிழ்- சுக்கில புத்தாண்டு ஸ்ரீராம நவமி |
| 18 | செவ்வாய் | பிரதோச விரதம் |
| 20 | வியாழன் | சித்திரா பௌர்ணமி |
| 29 | சனி | நடேசாபிஷேகம் |
| 30 | ஞாயிறு | திருநாவுக்கரசு நாயனார் குருபூசை |

நன்றி ஊர்ச்வே முருகன் ஆலயம்


**Verandah**

A TASTE OF PARADISE

150, High Street, Penge, London SE20

***ARE YOU FEELING HOME SICK?***

**Then Come and Try our Food Prepared in Authentic Sri Lankan Style.**

Our Specialities include Pittu, Idiappam, Chicken/Mutton Poriyal in Gingerly oil, Vadai, Jaffna style Kanavai curry, Fish curry, Fish Porial, Nethali Porial, Rhal Porial, Devilled Mutton, Fresh Crab curry (Sat-Sun), and Tandoori Fish (Sri Lankan style).
Also Speciality Vegetarian Dishes like, Poosani curry, Kathari Porial, Soya-meat curry, Vallarai Sampol.

FULLY LICENCED BAR WITH LOUNGE *
ARRACK, LION LAGER and NELLI CRUSH
Available

* The Largest Sri Lankan Restaurant in Europe *

**NEW**

Eat As Much As You Like Sunday Lunch, Buffet Style
at only £ 5.95p per Head; Children £ 3.00p
Open daily 12noon-3pm; 6pm-11.30pm

TELEPHONE FOR RESERVATIONS
01-659 1185


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ANTONS

- OFF LICENCE, CONFECTIONERY, TOBACCO AND GROCERY.
- LARGEST SELECTION OF TAMIL FILMS, VIDEO & CASSETTES
- WHOLESALE & RETAIL
- MAGAZINES & NEWS PAPERS
- SRI LANKAN GROCERIES.

15, ST. JOHNS ROAD,
WEMBLEY,
MIDDX.
HA9 7HU.
TEL: 01 - 903 3249

**இனிக்கும் புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

# VIBGYOR VIDEO VISION

TAMIL VIDEO RENTAL

- பழைய, புதிய தமிழ்ப்படப் பிரதிகள் (கையிருப்பில் 700 இற்கு மேல் உள்ளன)
- AUDIO CASSETTES
- VIDEO FILMING
- திருமண விழாக்கள்
- பிறந்ததின விழாக்கள்
- மற்றும் விசேட வைபவங்களுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்

AMALAN
17A, COTTENHAM ROAD,
WALTHAMSTOW,
LONDON E17
01 - 520 9819

Business Hours:
Week Days : 5.30 pm → 10.00 pm
Week Ends : 10.00 am → 10.00 pm


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்